விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 042 வள்ளுவர் ஆண்டு 2055 தை 16 செவ்வாய்க்கிழமை (30.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பெப்ரவரி 4 வடக்குக் கிழக்கில் 'கறுப்பு தினம்' ஆக பிரகடனம்

### உறவுகள் மற்றும் மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் முழுவதும் "கறுப்பு தினம்" ஆக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. பெப்ரவரி 4 ஆம் திகதி கறுப்பு நாளாக பிரகடனப்படுத்தப்படுவதாக வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் மற்றும் யாழ்ப் பாணப் பல்கலைக் 15

துன்னாலை கிழக்கில்

## விபரீத முடிவெடுத்த 15 வயது சிறுவன் மரணம்

(கரணவாய்)

விபரீத முடிவெடுத்த 15 வயது சிறுவன் ஒருவன் யாழ். போதனா வைத்தியசாலை யில் நேற்று உயிரிழந்துள்ளான்.

துன்னாலை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 15 வயது டைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

கடந்த 24ஆம் திகதி வியா ழக்கிழமை பிற்பகல் சிறுவன் தூக்கில் 15

## ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த வருடத்தில் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ள தாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

அந்தச் சபை விடுத்துள்ள அறிக்கையில், கடந்த வருடத்தில் 14.94 15

# ரணில் அரசைக் கவிழ்க்கும் போராட்டம் இன்று ஆரம்பம்

## கொழும்பில் மாபெரும் பேரணிக்கு ஏற்பாடு



(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு உட்பட பல பிரச் சினைகளை முன்னிறுத்தி ரணில் அரசுக்கு எதிராக இன்று கொழும்பில் மாபெரும் போராட்டம் முன் னெடுக்கப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

அனைத்து கட்டுப்பாடு களையும் மீறி நாளை (இன்று) வீதியில் இறங்குவோம்.

பொலிஸ்மா அதி பரும் வேறு எவரும் 02

## ஐஸ் போதை பொருளுடன் வவுனியாவில் பெண் கைது

(வவுனியா)

வவுனியா, வைரவபுளியங் குளம் பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் விசேட அதிரடிப்படை யினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். 15

## கடல் அலையால் இழுத்து செல்லப்பட்டவர் சடலமாக மீட்பு

### முல்லை மாத்தளனில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாத்தளன் கடலில் குளிக்க சென்ற இளம் குடும்பஸ்தரின் சடலம் நேற்று சாலை கடற்பகுதியில் கரை யொதுங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாத்தளன் பகுதி கடற்கரையில் நேற்று முன்தினம் மாலை குடும்பத் தினருடன் கடலில் குளித்துக் கொண்டிருந்த வேளை குறித்த குடும்பஸ்தர் அலையால் இழுத்து செல்லப் பட்டு நீரில் மாயமாகி 15

## இலங்கையில் மிகவும் சக்திவாய்ந்த அரசியல் திருப்பத்துக்கு தயார் - சம்பிக்க

(கொழும்பு)

இலங்கையில் பலம்மிக்க அரசியல் மாற்றம் ஒன்று உரு வாக அனைத்து விடயங்களும் தயார் நிலையில் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சம் பிக்க ரணவக்க தெரிவித்துள் ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட் டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், இந்த நாட்டில் பலம் பொருந்திய அரசியல் மாற்றம் ஒன்று 15



## 31 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் மன்னாரில் இளைஞன் கைது

(மன்னார்)

மன்னார் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சௌத்பார் பகுதியில் கைவிடப்பட்ட அட்டை பண்ணை ஒன்றில் இருந்து 31 ஆயிரம் போதை மாத்திரை களுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மன்னார் சௌத்பார் பகுதியில் மேற்கொண்ட சுற்றி 15

## யாழ்ப்பாணத்தில் இந்தியாவின் பாரம்பரிய நடன நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்தியக் கலைஞர்கள் வழங்கும் இந்தியாவின் பாரம் பரிய நடன நிகழ்வுகள் யாழ்ப் பாணத்தில் நடை பெறவுள்ளது. 15

## அரிசியில் தன்னிறைவு; இறக்குமதி செய்யப்படாது

### அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

அரிசித்தேவையில்இலங்கை தன்னிறைவு பெற்றுள்ளதால், 2024இல் அரிசியை இறக்குமதி செய்ய எதிர்பார்க்கவில்லை என கமநலத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டில் இல ங்கை தன்னிறை வடையும் வகையில், 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்

# குகபதமடைந்தார்

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த
சுகிர்தாதேவி குமாரதாஸ் மாப்பாண முதலியார்
28.01.2024 அன்று குகபதமடைந்தார்.


அன்னார் இறைபதமடைந்த அமரர் முதலியார் நமசிவாயம், அமரர் அகிலாண்டநாயகி நமசிவாயம் ஆகியோரின் பாசமிகு மகளும், அமரர் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்களின் அன்பு மனைவியும், ஷமித்ரா ரமணன், ஷன்ஜித்தா ராமச்சந்திரன், குமரேஷ் ஷயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியார் ஆகியோரின் அன்பு தாயும், ரமணன் ராமசந்திரன், பேராசிரியர் [டாக்டர்] சுதர்சன் ராமசந்திரன், டாக்டர் மிர்ணா குமாரதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும், ஷர்மதா, ஷரன்யா, [டாக்டர்] ஷனாத், [டாக்டர்] பிரவிநாத், ஹரிஷ்நாத், ஷமாயா, ஷவாராயா, குமரேஷ் அனீஷ்வரா ஆகியோரின் அன்பு பேத்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிகிரியைகள் 30.01.2024 செவ்வாய்க்கிழமை அவரது நல்லூர் மாப்பாணர் வளவு இல்லத்தில் இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரிகைகளுக்காக அமரரது பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

குமாரதாஸ் மாப்பாணர் குடும்பம்,
மாப்பாணர் வளவு - நல்லூர் - யாழ்ப்பாணம்

# அறிவித்தல்

அன்னை மடியில்
06 - 09 - 1939



ஆண்டவன் அடியில்
03 - 01 - 2024

## இராமலிங்கம் மயில்வாகனம்பிள்ளை
( ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் )

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், உசன் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்டு பின்னர் வள்ளிபுனம், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.இராமலிங்கம் மயில்வாகனம்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்) அவர்கள் கடந்த 03.01.2024 அன்று காலமானார். இறுதிக் கிரியைகள் கடந்த 05.01.2024 அன்று வள்ளிபுனத்தில் நடைபெற்றது.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம்-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிருஷ்ணசாமி-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் பங்கயற்செல்வி, புனிதவதி, ரங்கநாதன் மற்றும் காலஞ்சென்றவர்களான மின்னாம்பிகை, குமரவேள், ஞானசேகரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீரங்கநாதன், பஞ்சலிங்கம், ஜெயலட்சுமி மற்றும் காலஞ்சென்ற ஞானலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கலையரசி, கிருபாகரன், தமிழரசி, தமயந்தி மற்றும் காலஞ்சென்ற மங்கையற்கரசி ஆகியோரின் அன்புத்தந்தையும் நந்தகுமார், சாருமதி, ராதாகிருஷ்ணன், ஜெயச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவபாலன், கார்த்திக், பூஜா, நிவேதா, தீபிகா. ஜெயராமன். அபிஷாளினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (31.01.2024) புதன்கிழமை கீரிமலையில் நடைபெற்று பின்னர் எதிர்வரும் (02.02.2024) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது வள்ளிபுனம் வீட்டில் இடம்பெறும் கிரியைகளுடன் கூடிய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது மரணத்தின்போது நாம் துயருற்று இருந்தவேளை அனுதாபம் தெரிவித்து ஆறுதல்படுத்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்த அன்பர்களுக்கும் நமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலையரசி 077 763 2496, கிருபாகரன் 0015146864344, 0775018618, தமிழரசி (வாணி) 00447383099420, தமயந்தி 0768722328

தகவல்: குடும்பத்தினர் (18819)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்பு
காணி A9 வீதி முகப்புடன் விற்பனைக்கு உண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
வட மாகாண சபை 300 மீற்றர்
கைதடி 4 சந்தி 200 மீற்றர் தூரம் (18830)

076 788 0591 | 077 129 4999

## உடனடி வேலை வாய்ப்பு

யாழில் உள்ள கட்டிட நிர்மாண நிறுவனம் ஒன்றிற்கு
கீழ் உள்ள வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

- கட்டட மேற்பார்வையாளர் (Site Supervisor) ( 3 வருட அனுபவம் )
- களஞ்சியப் பொறுப்பாளர் (Store Keeper ) ( 2 வருட அனுபவம் )
- வெல்டர் ( Welder )
- துப்புரவுப் பணியாளர் ( Cleaning Staff ) (18823)

தொடர்புகளுக்கு :- காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணி
076 200 4827 | 077 558 8835
Lioneengineering9@gmail.com

## மணமகள் தேவை

15.01.1990, நட்சத்திரம் பூரம் - செவ்வாய் 7இல்,
கிரகபாவம் 33, அரச தொழில் மணமகனுக்கு
அரச தொழில் மணமகள் தேவை.
( ஆசிரியை விரும்பத்தக்கது )
வயது 4 = 5 வித்தியாசம். (18818)

077 914 7318


## ரணில்...

கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

ஆனால்அனைத்து சட்டங்களையும் மீறி நாளை கொழும்பிற்கு 50, ஆயிரம் பேரை கொண்டுவருவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

2022ம்ஆண்டு நாங்களே மக்களின் எழுச்சியை ஆரம்பித்து வைத்தோம். இம்முறையும்அதனை செய்ய எண்ணியுள்ளோம்.

எங்கிருந்து பேரணியாக செல்வோம் என்பதை தற்போதைக்கு நாங்கள் அறிவிக்கமாட்டோம். களத்திலேயே அறிவிப்போம் என ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

(ம-7)


## விற்பனைக்கு

பெரியமாவடி, சங்கத்தானை,
சாவகச்சேரியில் அமைந்துள்ள
நிலப்பரப்பு 1 குளி, 17.1 விஸ்தீரண
அளவுள்ள காணியும் அதனுடன்
இணைந்த வீடும்
விற்பனைக்குண்டு. (18826)

077 218 3674

## வேலையாள் தேவை

- அலுவலக உதவியாளர் (Office Assistant)
- உதவிக் கணக்காளர் (Account Assistant) (18827)

தொடர்பு – காலை 8.00 மணி தொடக்கம்
மாலை 5.00 மணி வரை
E-mail :- bestbuilders1983@hotmail.com
077 210 0749

## லங்கா மஹால்(PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை

லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1790/=
ஜேர்மனி - 1700/=
கனடா - 2150/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2050/=
இந்தியா - 990/=



இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (18813)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு
ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக
நேரடியாக இறக்குமதி செய்துதரப்படும்.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும்
பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக
பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா,
மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு.
077 8393 974

## விஞ்ஞான பாட ஆசிரியர் தேவை

வடமராட்சி நெல்லியடிப் பகுதியில்
வசிக்கும் தரம் 10இல் கல்வி பயிலும்
மாணவர் ஒருவருக்கு தனிப்பட்ட
முறையில் விஞ்ஞான பாடம் கற்பிக்கக்
கூடிய ஆசிரியர் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 634 1216

## விற்பனைக்கு

- 3 மறி ஆடு
- குளிர்சாதனப்பெட்டி

விற்பனைக்கு உண்டு
விலை
பேசித் தீர்மானிக்கலாம். (18832)

077 203 0309


# கண்ணீர் அஞ்சலி

திருமதி
## சுகிர்தாதேவி குமாரதாஸ் மாப்பாணமுதலியார்



நேற்று முன்தினம் ( 28.01.2024 )
ஞாயிற்றுக்கிழமை குகபதமடைந்த
சுகிர்தாதேவி குமாரதாஸ் மாப்பாணமுதலியார்
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
நல்லூர் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 62, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (C-8239)


V.N. சோமசுந்தரம் பாரியார் சௌந்தராம்பிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை கட்சிகளின் வாக்குகள்
# 31 வீதமாக அதிகரிப்பு

## அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டு

**(கொழும்பு)—**
**இலங்கையின் எதிர்வரும் தேர்தலில் அரசாங்கம் அமைப்பதற்கு அல்லது புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கு தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு பலமான காரணியாக அமையும் என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**



இதேவேளை இலங்கையில் சிறுபான்மை கட்சிகளின் வாக்கு வீதம் 31 வீதமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், தமிழ் அரசியல் கட்சிகள் ஆதரவு வழங்கும் விதத்தைக் கருத்திற்கொண்டு பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் இந்த சில விடயங்களை பொறுத்தே அமையும் என அரசியல் விமர்சகர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலைமைகள் வடக்கு கிழக்கிலும் தோட்டங்களிலும் உள்ள அரசியல் தலைமைகளுடன் நிறைய மாறலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவும் முஸ்லிம் கட்சிகளின் ஆதரவும் சமமாக இருக்கும்.

அண்மையில் முடிவடைந்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தேர்தலில் சிறீதரனின் வெற்றி குறித்து இலங்கையின் சிங்கள அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அவதானம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# கட்சி தாவவுள்ள எம்.பிக்கள்
## கொழும்பு அரசியலில் பரபரப்பு

(கொழும்பு)
எதிர்வரும் அமைச்சரவை மாற்றத்தின் போது அமைச்சுப் பதவி வழங்கப்படும் என்று தெரிவித்து எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்களுக்கு அரசாங்கத் தரப்பில் இருந்து வலை வீசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் நாட்களில் அமைச்சரவை மாற்றமொன்றை மேற்கொள்ள ஜனாதிபதி உத்தேசித்துள்ளார்.

இதன்போது எதிர்க்கட்சிக்கு கட்சி மாறினால் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என்று எதிர்க்கட்சியின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு அரசாங்கத் தரப்பில் இருந்து ஆசை காட்டப்பட்டுள்ளது.

தற்போதைக்கு எதிர்க்கட்சிகளின் இரண்டு பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட நான்கு முக்கியஸ்தர் கட்சி தாவும் தீர்மானம் தொடர்பில் பச்சைக்கொடி காட்டியுள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் எதிர்க்கட்சியில் இருந்து மேலும் சிலர் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (நி-6)

# கரட்டை தொடர்ந்து
## தக்காளி விலை அதிகரிப்பு

(கொழும்பு)
நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ தக்காளியின் மொத்த விலை 800 ரூபாவாக அதிகரித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக பெய்த கனமழையால் நுவரெலியா தோட்டங்களில் பயிரிடப்பட்டிருந்த தக்காளி பயிர் அழிந்து போனதால், பசுமைக் குடிலில் பயிரிடப்பட்ட மரக்கறி பயிர்கள் மட்டுமே இந்நாட்களில் சந்தைக்கு வருகிறது.

இதன்காரணமாகஒருகிலோ தக்காளியின் மொத்த விலை 800 ரூபாவாக அதிகரித்துள்ளது.

வயல்களில் பயிர்கள் அழிந்து வருவதால் பசுமைக் குடில்களில் விளையும் காய்கறிகளின் தேவை வெகுவாக அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



காலங்கள் மாறலாம்
காட்சிகள் மாறலாம்
நாம் உன் மீது கொண்ட
அன்பு மட்டும் மாறாது...

ஆயிரம் சொந்தங்கள்
அருகிலுண்டு - அழகாய்
அன்பு கொள்ள யாரும் இல்லை
இங்கு உன் போன்று....



**பிறப்பு 23.04.1986** **இறப்பு 01.01.2024**

கடந்த 01.01.2024(திங்கட்கிழமை) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர்.ஜிவாகரன் உஷாஜினி

அவர்களின்

வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 31.01.2024 நாளை (புதன்கிழமை) முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

காளிகோவிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில். (18806)

இங்ஙனம்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண உதைபந்தாட்ட போட்டி
## இளவாலை யங்ஹென்றீசியன் அரையிறுதிக்கு தகுதி



(யாழ்ப்பாணம்)

வடமாகாண உதைபந்தாட்ட போட்டியில் இளவாலை யங் ஹென்றீசியன் அணி கோல் மழை பொழிந்து அரையிறுதி யாட்டத்திற்கு தகுதி பெற்றுள் ளது.

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனு மதியுடன் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட இவ் வருடத்தின் முதலாவது மாகாண தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்று வருகின்றது.

இதில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றீசியன் அணியை எதிர்த்து கிளிநொச்சி உருத் திரபுரம் அணி மோதியது. ஆட்டத்தில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய இளவாலை ஹென் றீசியன் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது. (நி-6,90)

# காரைநகர் தோப்புக்காடு அபார வெற்றி

"யாழின் நாயகன்" உதைபந் தாட்ட தொடரில் காரைநகர் தோப்புக்காடு அணி அபார வெற்றி பெற்றது.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல் லிப்பளை நாமகள் விளையாட் டுக்கழகம்மாவட்ட ரீதியில் நடத் தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழின் நாயகன் உதைபந் தாட்ட சுற்றுப் போட்டி தெல்லிப் பளை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்று வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற போட்டியில் காரைநகர் தோப் புக்காடு அணியை எதிர்த்து யூனியன்ஸ் அணி மோதியது. அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய காரைநகர் தோப்புக்காடு அணி 9:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன் னேறியது. (ம)



# 'யாழின் நாயகன்' உதைபந்தாட்ட தொடர்; யாழ்.ஐக்கியம், காளியம்பாள் அணிகள்

## அடுத்த சுற்றுக்கு தகுதி





'யாழின் நாயகன்' உதை பந்தாட்ட தொடரில் யாழ். ஐக்கி யம் மற்றும் காளியம்பாள் அணி கள் அடுத்த சுற்றுக்கு முன்னேறி யுள்ளன.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனு மதியுடன் தெல்லிப் பழை நாமகள் விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட "யாழின் நாயகன்" உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெற்று வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் யாழ். ஐக்கியம் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி மோதியது. இரு அணி களும் ஒன்றுக்கொன்று சளைத்த வர்களல்ல என்பதனை நிரூபிக் கும் முகமாக விளையாடினர். இதனால் இரு அணிகளும் 1:1 என்ற கோல் கணக் கில் சம நிலை வகித்தனர். இதனால் சமநிலை தவிர்ப்பு உதைமூலம் வெற்றி தோல்வி தீர்மா னிக்கப் பட்டது.

இதில் யாழ்.ஐக்கியம் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில்காளியம்பாள்அணியை எதிர்த்து கொலின்ஸ் அணி மோதி யது. இதில் காளியம்பாள் அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற் றுக்குத் தகுதி பெற்றுள்ளது. (நி-6-90)


# கண்ணீர் அஞ்சலி!



எமது நிலையத்தின் உறுப்பினர் திரு.செ.குமரேசன்
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் மாணிக்கம் செல்வரத்தினம்


தோற்றம்: 25.10.1944 | மறைவு: 26.01.2024

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி

என்றும் உங்கள் நினைவில்:– கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக்கழகமும் (K.C.C.C & K.C.C.C.S.C)


# மரண அறிவித்தல்

## சின்னையா தனபாலசிங்கம்



பிறப்பு : 23.09.1937 | இறப்பு : 28.01.2024

வடமராட்சி கிழக்கு, அம்பன் குடத்தனையைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தனபாலசிங்கம் அவர்கள் 28.01.2024 ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - நாகம்மா தம்பதி யரின் அன்பு மகனும் றோஸ் மலரின் அன்புக் கணவரும் ஜெயலதா, ஜெயகரன், ஜெயமதி, ஜெயமோகன், ஜெயநந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தை யும் தெய்வானையின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.01.2024) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அம்பன்,
குடத்தனை.

(C-8241)

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலும் பல நிபந்தனைகளை இலங்கைக்கு விதித்த ஐ.எம்.எப்

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கவுள்ள இரண்டாம் தவணை கடன் தொகைக்காக சர்வதேச நாணய நிதியம், மேலும் 75 புதிய நிபந்தனைகளை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் முதலாம் தவணைக் கடன் தொகை வழங்கப்பட்ட போது, இலங்கை அரசாங்கத்திடம் 73 நிபந்தனைகளை முன்வைக்கப்பட்டிருந்தன.

கடந்த 2023ஆம் ஆண்டின் நவம்பர் மாத இறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய குறித்த 73 நிபந்தனைகளில் 60 நிபந்தனைகளை அரசாங்கம் இது வரை நிறைவேற்றியுள்ளது.

எஞ்சிய நிறைவேற்றப்படாத 13 நிபந்தனைகளில் 8 நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் 5 நிபந்தனைகள் கடுமையான நிபந்தனைகள் என்பதால் அவற்றை நிறைவேற்ற கால அவகாசம் தேவைப்படுவதாக அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் அதற்கு ஐ.எம்.எப் இணக்கம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ஐ.ம.ச வுடன் இணைந்தார் ஜெனரல் தயா ரத்நாயக்க


(கொழும்பு)

ஓய்வுபெற்ற இலங்கை இராணுவ ஜெனரல் தயா ரத்நாயக்க ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளார்.

நேற்று எதிர்க்கட்சி தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவை சந்தித்ததன் பின்னர் ஐக்கிய மக்கள் சக்திக்கு தனது ஆதரவை வழங்கினார்.இந்த சந்திப்பின் போது, எதிர்க்கட்சி தலைவர், ஐக்கிய மக்கள் சக்தியின் பொது கொள்கை தொடர்பான சிரேஷ்ட ஆலோசகராக தயா ரத்நாயக்கவை நியமித்தார்.தயா ரத்நாயக்க இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராகவும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் கீழ் கைத்தொழில் அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# வங்குரோத்து நிலையில் நாடு என்பது முற்றிலும் பொய்

## மத்திய வங்கி ஆளுநர் பகிரங்கம்



(கொழும்பு)

இலங்கை வங்குரோத்து நாடாக மாறியுள்ளதாக கூறப்படும் அனைத்துக் கூற்றுகளும் உண்மைக்குப் புறம்பானது என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க குற்றஞ்சாட்டி உள்ளார்.

நாட்டின் வங்குரோத்து நிலை குறித்து விசாரிக்கும் பாரர்ளுமன்றக்குழு முன் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தொடர்பிலான உண்மைகளை மத்திய வங்கியின் ஆளுநர் இதன்போது வெளிப்படுத்தி உள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு நடந்தது நாட்டின் திவால்நிலை அல்ல, சில தேர்ந்தெடுக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களின் தீர்வை ஒத்திவைப்பதே தவிர வேறில்லை.

அத்துடன், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை முழுமையாக ஆராய்ந்ததாகவும் அதில் திவால் பிரகடனம் இடம்பெறவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இந்த வழக்கின் தீர்ப்பானது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார அசௌகரியங்கள் தொடர்பில் நீண்ட விளக்கத்தை வழங்கியுள்ளதாகவும் ஆளுநர் குறிப்பிட்டிருந்தார்.

நாடு திடீரென மூடப்பட்டதன் காரணமாக கொவிட் தொற்றுநோய்களின் போது நாடு பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய மத்திய வங்கியின் ஆளுநர், குறைந்த வளங்களைக் கொண்ட ஏழை நாட்டை மூடுவதற்கு எடுத்த தீர்மானம் தேசிய வருமானத்திற்கு பாரிய இழப்பை ஏற்படுத்தியதாக மேலும் தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாக தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாடு வங்குரோத்து நிலையில் உள்ளதாக கூறப்படுவதை தாம் முற்றாக நிராகரிப்பதாகவும் அனைத்துக் கூற்றுகளும் உண்மைக்குப் புறம்பானது எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.(நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3027

அபிலாஷினி




கோபினா




கஸ்தூரி




சிந்து

நேத்து எங்கவீட்டுல அயன்பாக்ஸ் வேலை செய்யலை.பக்கத்து வீட்டுல போய் அயன் பாக்ஸ் கேட்டேன்.இங்கேயே அயன் பண்ணிட்டு போங்கனு சொன்னான்.

இன்னைக்கு அந்த பக்கத்து வீட்டுக்காரன்.. என்கிட்ட வந்து, வீடு கூட்ட தொடப்பம் கேட்டான். இங்கையே கூட்டிட்டு போங்கனு சொன்னேன். திட்டிட்டு போறான்யா அவன்..

நான் என்ன தப்பா சொல்லிட்டேன். அவன் சொன்னததான நானும் சொன்னேன்...

/alwzsmle

வசந்தன்




முகேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதியர் தமிழியலுக்கு ஆற்றிய பங்களிப்பு

## நிகழ்நிலையில், உரைத் தொடர் 2 ஆம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புதுடில்லியில் உள்ள ஜவகர்லால்நேரு பல்கலைக் கழகத்தின் சிறப்பு நிலைத்தமிழ்த்துறை நடத்தும் தமிழியலுக்கு பேராசிரியர்கள் சண்முதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரின் பங்களிப்பு பற்றிய உரைத்தொடரின் 2 ஆம் நாள் நிகழ்வு இன்று மாலை 6 மணி தொடக்கம் 8 மணிவரை நிகழ்நிலை ஊடாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ் இலக்கண இயல்புகள் வேலூர் திருவள்ளுவர் பல்கல்லைக்கழக, மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் இரா.ஜெயராமன், தமிழின் பா வடிவங்கள் மதுரை.தியாகராசர் கல்லூரி, தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் அ. மோகனா, குறுந்தொகை-ஒரு நுண்ணாய்வு வாரணாசி, தனிநிலை ஆய்வாளர் முனைவர் இரா. ரம்யா ஆகியோர் ஆய்வுகளை நிகழ்த்தவுள்ளனர்.

கூகுள் மீட் https://meet.google.com/give-yphd-shd. (நி-6)

# மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக காளிங்க ஜெயசிங்க பொறுப்பேற்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக காளிங்க ஜெயசிங்க நேற்று திங்கட்கிழமை பொறுப்பேற்றார்.

யாழில் உள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் கடமைகளை பொறுப்பேற்றார்.

இதன்போது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் கலந்துகொண்டனர். இதுவரை காலமும் கடமையாற்றிய மஞ்சள செனரத் பதவி உயர்வு பெற்று சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)



நெல்லியடி சமுர்த்தி வங்கிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (படம்- மகாலிங்கம்)

# போதைப்பொருளுடன் இரு இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வில் (கார்னிவேல்) போதைப்பொருட்களுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மைதானத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய இரு இளைஞர்களை அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சோதனையிட்ட வேளை உடைமையில் இருந்து ஒரு தொகை கஞ்சாவை மீட்டுள்ளனர். அதனை அடுத்து இரு இளைஞர்களையும் கைது செய்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)

## நிபந்தனை அடிப்படையில்

# பருத்தித்துறையில் கைதான 10 இந்திய மீனவர்கள் விடுதலை

(கரணவாய்)

எல்லை தாண்டி பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த 14ஆம் திகதி கைதாகிய இந்திய மீனவர்கள் 10 பேரும் பருத்தித்துறை நீதிமன்றினால் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டனர்.

யாழ். நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரிகள் மீனவர்களுக்கு எதிராக குற்றப் பத்திரத்தை நேற்று திங்கட்கிழமை மன்றில் தாக்கல் செய்தனர்.

மீனவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் குறைந்தபட்சம் மூன்று மாதங்கள் என்ற அடிப்படையில் மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் ஒன்பது மாதா சாதாரண சிறைத் தண்டனையை விதித்து அதை பத்து வருடங்களுக்கு ஒத்தி வைத்து நிபந்தனையுடன் விடுவித்து உத்தரவிட்டார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை. படகு அரசு உடைமையாக்கப்பட்டுள்ளதுடன், முதலாவது சந்தேகநபரான படகின் உரிமையாளருக்கு நீதித்துறையூடாக அழைப்பாணை அனுப்புமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் படகுரிமையாளருக்கான வழக்கு எதிர்வரும் 10 ஆம் மாதம் 24 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.(நி-6-60)

# விண்ணப்ப திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கைச் சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான பரீட்சை விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி எதிர்வரும் 05.02.2024 ஆக நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான பரீட்சைகள் அனைத்தும் வரும் மே மாதம் நடைபெறவிருக்கும் க.பொ.த (சா.த) பரீட்சைகள் முடிவடைந்த பின்னர் நடைபெறும் என சபைத் தலைவர் பொ.ரவிச்சந்திரன் அறிவித்துள்ளார். (நி-5-6)

# யாழில் 10 கிலோ மாட்டிறைச்சி 20 மதுபான போத்தல்கள் மீட்பு

## சந்தேகநபரொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.அல்லைப்பிட்டி பகுதியில் வீடொன்றில் இருந்து 10 கிலோ மாட்டிறைச்சி மற்றும் 20 மதுபான போத்தல்கள் என்பவற்றை மீட்ட பொலிஸார் வீட்டின் உரிமையாளரையும் கைது செய்துள்ளனர்.

அல்லைப்பிட்டி பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாடொன்று இறைச்சியாக்கப்படுவதாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரைந்த போது, மாடொன்று இறைச்சியாக்கப்பட்டதற்கான அடையாளங்கள் தென் பட்டதையடுத்து தொடர்ந்து முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் அருகில் உள்ள வீட்டின் மீது சந்தேகம் கொண்டு, வீட்டில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதன் போது வீட்டினுள் இருந்து 20 மதுபான போத்தல்கள், குளிர்சாதன பெட்டியில் இருந்து 10 கிலோ இறைச்சியையும் மீட்டதுடன், வீட்டின் உரிமையாளரையும் கைது செய்தனர்.

தமது வீட்டில் கொண்டாட்டம் ஒன்றிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்த நிலையில் அதற்காகவே மதுபான போத்தல்களும், இறைச்சியும் இருந்தது என வீட்டார் கூறிய போதிலும், பொலிஸார் அதனை ஏற்காது குறித்த நபரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். (நி-6-33)




யாழ்.ஐசிபிரி கம்பஸ் உயர்கல்வி நிலையத்தின் உயர் டிப்ளோமா தாதியியல் கற்கைநெறியினை பயிலுகின்ற மாணவர்கள் டெங்கு விழிப்புணர்வு நடைபவனியினை சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து கடந்த புதன்கிழமை முன்னெடுத்திருந்தனர்.


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 750 | 700 | 700 | 600 | 660 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 220 | 240 | 220 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 900 | 1200 | 1100 |
| தக்காளி | 500 | 700 | 650 | 800 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 140 | 120 | 150 | 100 |
| கோவா | 500 | 650 | 700 | 800 | 750 |
| கரட் | 1200 | 1000 | 2400 | 2000 | 1800 |
| பூசணி | 200 | 200 | 180 | 200 | 180 |
| புடோல் | 250 | 250 | 200 | 400 | 230 |
| வாழைக்காய் | 200 | 250 | 150 | 300 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 280 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 420 | 380 | 380 | 400 | 420 |
| பாகற்காய் | 800 | 200 | 600 | 1000 | 620 |
| வெண்டக்காய் | 600 | 700 | 200 | 600 | 420 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 200 | 120 |
| பயற்றங்காய் | 700 | 650 | 550 | 800 | 700 |
| லீக்ஸ் | 450 | 500 | 600 | 800 | 650 |
| பீற்றூட் | 800 | 700 | 650 | 800 | 700 |
| கறிமிளகாய் | 600 | 800 | 600 | 1000 | 1000 |
| முருங்கைக்காய் | 2000 | -- | 2400 | -- | 2000 |
| போஞ்சி | 600 | 600 | 550 | 800 | 650 |
| கத்தரிதம்புள்ள | 700 | 550 | 450 | 550 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 60 | 150 | 200 | 80 |
| தேசிக்காய் | 200 | 350 | 180 | 200 | 260 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 80 | 70-100 | 80-107 |
| இராசவள்ளி | 400 | 400 | 400 | 600 | 450 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 350 | 500 | 320 |
| முள்ளங்கி | 180 | 200 | 150 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 320 | 150 | 60 | 140 |
| வல்லாரை | 80 | 250 | 50 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | 150 | 80 | 150 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செல்லக்கதிர்காம வீதியில் விபத்து இருவர் உயிரிழப்பு



(கதிர்காமம்)

கதிர்காமம் - செல்லக் கதிர்காமம் வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


குறித்த விபத்தானது நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வான் ஒன்றும் லொறியொன்றும் மோதியே விபத்து சம்பவித்துள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் வானில் பயணித்த மேலும் 3 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

# லொஹான் ரத்வத்தவிற்கு புதிய அமைச்சு பதவி



(கொழும்பு)

பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் லொஹான் ரத்வத்த பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

மது போதையில் தனது நண்பர்களுடன் குழுவாக வெலிகடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளுக்கு சென்று, தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்தியதாக லொஹான் ரத்வத்த மீது குற்றம் சுமத்தப்பட்டது.

கடந்த 2021 செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தை அடுத்து சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு பதவியை அவர் இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இராசிபலன்

30.01.2024
தை 16, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தி காலை 7.44 மணிவரை
உத்தரம் முன்னிரவு 8.49 மணிவரை

சுபநேரம் -11.06-12.36 மணிவரை
இராகுகாலம்-3.36-5.06 மணிவரை
அமிர்த சித்தம், சண்டேசுவரர் குருபூசை

சந்திராஷ்டமம்
திருவோணம், அவிட்டம்

வளவன்

**மேஷம்** மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**ரிஷபம்** பிள்ளைகளின் தேவையறிந்து, பூர்த்தி செய்வீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், கனவுகள் நனவாக இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.

**கடகம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள், காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்** குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பணப் புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், குடும்ப ஒற்றுமை கூடும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், மனதில் புதிய சிந்தனைகன் தோன்றும், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள்.

**கும்பம்** வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதம் ஆகலாம், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றிமறையும், பிரயாண பயமுண்டு, மருத்துவச்செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**மீனம்** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.

ஈடுபாட்டுடன் செய்யும் வேலையே நேர்த்தியாக முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# 2 ஆம் உலகப்போரில் பங்கேற்ற பெண் 102 ஆவது பிறந்த நாளை கொண்டாடினார்




(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள வெர்ஜினியா பகுதியை சேர்ந்தவர் ஹெலன்மேரி ஹார்வத்.

இவர் 2 ஆம் உலக போரில் பங்கேற்றவர். தனது 21 வயதில் வெர் ஜினியா வில், உலக போர் நடைபெற்ற கால கட்ட த்தில் அங்கு நீர் மூழ்கி கப்பல்களை கண்ட றிய பயன்படுத்தப்பட்ட கரு விகளை இயக்கியவர்.

இந்நிலையில் அவரது 102 ஆவது பிறந்தநாள் சமீபத்தில் கொண்டாடப்ப ட்டது. அன்றையதினம் ஹெலனுக்கு எதிர்பாராத பரிசளிக்க அவரது மகன் முடிவு செய்தார்.

அவர் சவுத்வெஸ்ட் ஏர் லைன்ஸ் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். அவர் தனது தாயின் பிற ந்த நாள் குறித்து சக ஊழியர்களிடம் தெரி வித்ததும் அந்த விமான நிறுவனம் உலக போரில் பங்கேற்ற ஹெல ன்மேரி ஹார்வத்தின் 102 ஆவது பிறந்த நாளை சிற ப்பாக கொண்டாட முடிவு செய் தது.

அதன்படி ஹெலன் மேரி ஹார்வத்தை விமானத்தில் அழைத்து வந்தனர். செயின்ட் லூயி சில் அவர் இறங்கியதும் ஹெலனை ஊழியர்கள் மகிழ்ச்சியுடன் வரவே ற்றனர்.

பின்னர் அமெரிக்க கொடி களை அசைத்து ஹெலனின் தலையில் கிரீடம் அணி வித்த னர்.

மேலும் ஏராளமா னோர் ஆரவாரம் செய்து ஹெல னின் பிறந்த நாளை உற்சா கமாக கொண்டாடினர்.

இது குறித்த வீடி யோக்கள் சமூக வலை த்தளங்களில் வைர லாகி வருகின்றன. (நி-6)

# இஸ்ரேல் இர

## 165 பேர் உ

## ஒட்சிசன் சிலிண்டர்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் இராணுவம் காசா மீது ந நாளில் 165 பேர் கொல்லப்பட்டுள அறிவித்துள்ளது.

இது குறித்து ஹமாஸ்அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் "நேற்று முன" தினம் பகலுடன் முடிந்த முந் தைய 24 மணி நேரத்தில் இஸ்ரேலின் தாக்குதலி னால் பாலஸ்தீனியர்கள் 165 பேர் கொல்லப்பட்டுள்ளதோடு 290 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் காசாவில் உயிரிழந்த பாலஸ்தீனியர்க ளின் மொத்த எண்ணிக்கை 26 ஆயிரத்து 422 ஆக உயர்ந்

# மாலைதீவு பாராளுமன்றத்தில் எம்.பி.க்கள் இடையே கைகலப்பு



(மாலைதீவு)

மாலைத்தீவு பாராளு மன்றத்தில் நேற்று சிறப்பு கூட்டம் நடைபெற்றது.

ஜனாதிபதி முய்சு தலை மையில் புதிதாக நியமிக் கப்பட்டுள்ள மந்திரிகளுக்கு பாராளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்க சிறப்பு கூட்டம் நடை பெற்றது.

கூட்டத்தில் விவாதத் தின்போது, ஆளுங்கட்சி மக்கள் தேசிய காங்கிரஸ் கட்சி எம்.பி.க்கள், ஆளும் கட்சியின் ஆதரவு பெற்ற மாலைதீவு முற்போக்கு கட்சி எம்.பி.க்களுக்கும் எதிர்க் கட்சியான மாலைதீவு ஜன நாயக கட்சி எம்.பி.க்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்ப ட்டது.மேலும் வாக்குவாதம் முற்றிய நிலையில் ஆளு ங்கட்சி, எதிர்க்கட்சி எம்.பி க்களுக்கு இடையே கை கலப்பு ஏற்பட்டது.

கைகலப்பு மோதலாக மாறியது. இதனால் பாரா ளுமன்றத்தில் பெரும் பர பரப்பு ஏற்பட்டது. பாரா ளுமன்றத்தில் எம்.பி. க்கள் மோதிய சம்பவம் தொட ர்பான வீடியோ சமூக வலை தளத்தில் வைரலாகி வரு கிறமை குறிப்பிடத்தக்கது.

மாலைதீவில் மக்கள் தேசிய காங்கிரஸ் கட்சி ஆட்சி நடைபெற்று வருகிறது. அந்நாட்டு ஜனாதிபதியாக முகமது முய்சு செயற்பட்டு வருகிறார். இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ள முய்சு பல வேறு சர்ச்சைக்குரிய நடவ டிக்கைகளை எடுத்து வரு கின்றமை குறிப்பிடத்த கது. (நி-6)

# அயல்நாடுகளுக்கு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள ஈரானின் செயற்கைக்கோள்கள்

(டெஹ்றான்)

ஈரான் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை வெற்றி கரமாக மூன்று செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியுள் ளதாக அறிவித்துள்ளது.

மஹாடா, கேஹான்- 2 மற்றும் ஹாடேப்ஃ - 1 என்ற மூன்று செயற் கைக் கோள் களையே ஈரான் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

இந்த செயற்கைக் கோள்கள் தகவல் தொடர்பு மற்றும் புவிசார் தொழில் நுட்பம் மற்றும் விண் வெளிக்கு சரக்குகளை அனு ப்பும் திறன் ஆகியவற்றை சோதிக்க பயன்படுத்தப்படும் என ஈரான் தெரிவித்து ள்ளது.

ஈரானின் ஏவுகணை சோதனைகள் கடந்த கால ங்களில் பல தோல்வி களைக் கண்டிருந்தன.

எனினும் இஸ்ரேல் காசா மோதல் நிலை அதிகரித்து வரும் நிலையில் தற்போது இந்த சோதனை நடவடி க்கையானது பதற்ற நிலையை ஏற்படுத்தி யுள்ளதாக சர்வதேச செய் திகள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மீண்டும் ஏவுகணை சோதனை கொரிய நாடுகளிடையே பதற்றம்

(பியாங்யாங்)

கொரிய தீபகற்ப நாடு களான வடகொரியா, தென் கொரியா இடையே மோதல் வலுத்து வரு கிறது.

இதனால் அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுக ளின் ஆதரவுடன் ராணு வம் மற்றும் உளவுத் தக வல்கள் பரிமாற்றத்தில் தென்கொரியா முன்னே ற்றம் கண்டு வருகிறது. இதற்கு எதிர்ப்பு தெ ரிவித்து வடகொரியா ,அவ் வப்போது ஏவுகணை வீச்சு போன்றவற்றில் ஈடுபட்டு தென் கொரியாவை அச்சு றுத்தி வருகிறது.

இந்தநிலையில் கொரிய நாடுகளுக்கு கிழக்கே உள்ள கடற்கரை பகுதி யில் வடகொரியா கடற் படையைச் சேர்ந்த போர்க் கப்பல்கள் கண்காணிப்பு பணி மேற்கொண்டன.

அப்போது அவை நிலத் தில் இருந்து வானத்தை தாக்கும் சக்தி கொண்ட நவீன ரக ஏவுகணை களை சோதித்து பார்த் துள்ளன.

வான் நோக்கி சரமாரி யாக ஏவப்பட்ட அந்த ஏவு கணைகள் இலக்கை வெற்றிகரமாக தகர்த்ததாக தென்கொரியா ராணுவம் தெரிவித்துள்ளது. இது குறி த்து அமெரிக்காவுடன் இணைந்து விசாரிக்க உள் ளதாகவும் தென்கொரியா தெரிவித்துள்ளது. (நி-6)

தச

ஜே



(வோ

பாலஸ

ஹமாஸ

எதிராக

தாக்குத

ஆதரவ

ளது. இ

ஆதரவ

ளிகள் கு

கடும் கே

இந்த

னில் ந

தலில் 3

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ராணுவம் கொடூர தாக்குதல்

# யிரிழப்பு, 290 பேர் படுகாயம்!

## டர்களுக்கு தட்டுப்பாடு

**நடத்திய கொடூரத் தாக்குதலில் ஒரே டுள்ளனர் என ஹமாஸ் அமைப்பு**



துள்ளதோடு, காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 65 ஆயிரத்து 87 பேராக அதிகரித்துள்ளது.

அத்துடன் வைத்தியசாலைகளில் ஒட்சிசன் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் உயிருக்குப் போராடும் அவல நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

**ட்ரோன் தாக்குதலில் 3 அமெரிக்க வீரர்கள் பலி**

# தக்க பதிலடி கொடுப்போம் என ஜோ பைடன் எச்சரிக்கை விடுப்பு



(வோஷிங்டன்)

பாலஸ்தீனத்தின் காசாவில் மாஸ் அமைப்பினருக்கு திராக நடத்தப்பட்டு வரும் க்குதலுக்கு இஸ்ரேலுக்கு தரவாக அமெரிக்கா உள் து. இதனால் ஹமாஸுக்கு தரவாக இருக்கும் போரா கள் குழுக்கள் அமெரிக்கா மீது ம் கோப த்தில் உள்ளன.

இந்த நிலையில் ஜோர்டா ல் நடந்த ட்ரோன் தாக்கு லில் 3 அமெரிக்க வீரர்கள் பலியான சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

சிரியா எல்லைக்கு அருகில் வட கிழக்கு ஜோர்டானில் அமெரிக்க படைகள் நிலை நிறுத்தப்பட்டு உள்ளன. கடந்த சனிக்கிழமை இரவு இந்த படைகளை குறி வைத்து அதிரடி ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் அமெரிக்க வீரர்கள் 3 பேர் உயிர் இழந்தனர். 36 பேர் படுகாயம் அடைந்ததாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் தொடங்கிய பிறகு முதன் முறையாக அமெரிக்க படைகளுக்கு எதிராக இந்த தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி ஜோபைடன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது ஜோர்டானில் அமெரிக்க தளங்களின் மீது டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டதில் 3 வீரர்களை இழந்து இருக்கிறோம்.

இந்த தாக்குதலின் உண்மையான காரணத்தைகண்டறியும் முயற்சி நடந்து வருகிறது.

இது சிரியா மற்றும் ஈராக்கில் இயங்கும் தீவிர ஈரான் ஆதரவு போராளி குழுக்களால் நடத்தப்பட்டது என்பது எங்களுக்கு தெரியும். இதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-6)

# மோனாலிசா ஓவியத்தை சேதப்படுத்திய விஷமிகள்



(பாரிஸ்)

லியோனார் டோடாவின் சியின் புகழ்பெற்ற ஓவிய மான மோனாலிசா ஓவிய த்தின் மீது இனம் தெரியாத நபர்கள் கிண்ணத்தில் நிரப் பப்பட்ட சூப்பை கொண்டு சேதப்படுத்தியதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


பிரான்சில் உள்ள லூவ்ரே அருங்காட்சி யகத்தில் உள்ள ஓவியத்தின் மீது உணவுப் பாதுகாப்பு தொடர்பான கோஷங்களை எழுப்பிய இரண்டு எதிர்ப்பாளர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது.

குண்டு துளைக்காத கண் ணாடி கவரால் பாதுகாக்கப்பட்டதால் ஓவியத்தை சேதப்படுத்த முடியவில்லை என பிரான்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியம் உலகில் மிகவும் பிரபமான ஓவிய மாக கருதப்படுகிறது. (நி-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தியடிகளின் 76 ஆவது சிரார்த்த தினம்



அமைதிக்காகப் போராடிய பெருந்தலைவர் மகாத்மா காந்தி. உலகிலுள்ள இன, மத, மொழி, பிரதேச, சாதி மோதல்களையும் களைவதற்கு அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. எல்லாச் சமயங்களையும் தம் சமயம் போன்று மதித்த உத்தமர் அவர். அவரின் சாதனைகள் காரணமாக இன்று மேலைத்தேய அறிஞர்களின் ஆராய்ச்சிக்குரியவராக காந்தி மாறியிருக்கிறார். உயர்ந்த இந்தியப் பண்பாடும் நாகரிகமும் இந்தியர்களுக்கு மாத்திரமன்றி கீழைத்தேய நாடுகள் அனைத்திற்கும் பொதுவான ஒன்றாகும். இந்திய தத்துவம் இன்று கீழைத்தேய நாடுகளுக்கே வழிகாட்டுவதாக உள்ளது. ஈழத்தோடு இந்தியா மிகவும் நெருக்கமான தொடர்புடையது. இதனால் தான் நீண்ட ஒரு சங்கிலியில் உள்ள பதக்கம் என்று இந்தியாவையும் இலங்கையையும் காந்தி வர்ணித்துள்ளார்.

"காந்திய சிந்தனை" எமது நாட்டில் பள்ளிகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை பரவலாக்கப்பட வேண்டும். இதன் மூலமே முற்போக்கான சமூக நலனுள்ள நற்சமுதாயத்தை உருவாக்க முடியும். "மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்" என்ற நூலின் ஆசிரியர் வி.க.கூறியது போல "மார்க்சியமும் காந்தியமும்" இணைந்த கோட்பாடே எதிர்கால உலகிற்கு வழிகாட்டப் போகின்றது.

உலகிற்கு ஒளிவிளக்காக வாழ்ந்தவர் மகாத்மா காந்தி. அவருடைய சிந்தனைகள் சமூக வாழ்வுக்கு என்றும் வழிகாட்டுவனவாக அமைந்துள்ளன. அன்பு, அஹிம்சை, சமாதானம் ஆகியவற்றின் தேவை பெரிதும் உணரப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில் காந்திய வழிமுறை இன்றியமையாததாக இருக்கின்றது. அவருடைய அறவாழ்க்கை இன்றைய தலைவர்களுக்கு முன்னுதாரணமான ஒன்றாக அமைய வேண்டும்.

மக்கள் தொண்டனாகவும் ஏழைகளின் தோழனாகவும் வாழ்ந்து சத்திய வேள்வியில் தன் உயிரை ஈந்த இந்த தியாகச் செம்மலின் வாழ்வு எம் எல்லோருக்கும் முன்னுதாரணமாக இருக்கின்றது. அவருடைய வாழ்க்கை வரலாற்றை இன்றுள்ள தலைமுறையினர் ஒரு முறையாவது படிக்க வேண்டும். அதன் மூலமாக தமது கிராமங்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக சேவையாற்ற முன்வர வேண்டும். அப்போது காந்தியின் கனவான "கிராமராஜ்ஜியம்" என்ற எண்ணக்கருவை எட்டி விடலாம். எமது நாட்டில் இன்று உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடிக்குக் கூட அவரின் சுயதொழில் உற்பத்தி முறைகள், விவசாய கிராமங்கள் போன்ற சிந்தனைகள் எமக்கு வழிகாட்டுவதாக அமையும்.

மகாத்மாவிற்கு அஞ்சலி செலுத்துவோம். மானுடநேயமுள்ளோராக வாழ்வோம்.

**எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி.**
**அகில இலங்கை காந்தி சேவா சங்கம்.**

# மாவனல்லையில் தீ விபத்து 30 கடைகள் எரிந்து நாசம்

0

மாவனல்லை நகரின் பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 30 கடைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

உடனடியாக தலையிட்ட பொலிஸார், மாவனல்லை பிரதேச சபையின் தீயணைப்பு பிரிவு மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயை அணைத்தனர்.

பழங்கள், ஜவுளி மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யும் பல கடைகள் தீயில் எரிந்து நாசமாகின.

தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப் பட வில்லை என்பதுடன், மாவ னல்ல பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

## சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் கடத்துவோருக்கு அதிகபட்ச தண்டனை

(கொழும்பு)

சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் சந்தேக நபர்கள் மற்றும் சிறைக்கைதிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஒன்பது சிறைகளில் புனர்வாழ்வுப் பிரிவுகள் இயங்கி வருவதுடன், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சிறைகளில் தங்கியிருந்து பல்வேறு தொழில்களை செய்து வருகின்றமை தெரியவந்துள்ளது.

இதன் காரணமாகவே போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் நபர்கள் மற்றும் சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட மாட்டாது என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல் தெனிய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## தாய்லாந்து பிரதமர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று நாட்டுக்கு வருகை தரவுள்ள அவர், இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின விழாவில் பிரதம அதிதியாக பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தரப்பினருடன் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கை – தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை கைச்சாத்திடும் நிகழ்விலும் அவர் பங்குபற்றவுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-6)

## இன்று ஒரு தகவல் 18



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அறிவுரை

ஓர் இளம் தாய்!

அறிஞர் அரிஸ்டோட்டிலை தேடிப் போனாங்க.

அவருக்கிட்ட போய் "ஐயா! என் பிள்ளைக்கு நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுக்கணும் என்று ஆசைப்படுகிறேன். எந்த வயசில ஆரம்பிக்கலாம்"என்று கேட்டாங்க!

அதுக்கு அரிஸ்டோட்டில் "குழந்தையோட வயசு என்னம்மா" என்று கேட்டார்.

அந்த அம்மா ஐந்து வயசு என்று சொன்னாங்க!

அரிஸ்டோட்டில் உடனே: "ஐயையோ! உடனே வீட்டுக்குப் போம்மா... ஏற்கனவே ஐந்து வருஷம் தாமதப்படுத்திட்டீங்களே" அப்படி என்றாராம்.

இதுல இருந்து என்ன தெரியுது என்றால்...

நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுக்கிறதுக்கு நேரம் காலம் பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது!

எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர்... அவருக்கு ஒரே பிள்ளை! என்னங்க பிள்ளையை பள்ளிக்கூடத்திலே சேர்க்க வேணாமா என்று கேட்டா அவர் என்ன சொல்வாரு தெரியுமா?

அதுக்கெல்லாம் ஒரு நேரம் காலம் வரவேணாமா. அதுதான் பார்த்துக்கிட்டு இருக்கேன் என்பாரு!

இவரெல்லாம் எந்த காலத்தில பிள்ளைய படிக்க வைக்கப்ப பேறாரு?

நல்ல பழக்கத்தை சொல்லிக் கொடுக்கணும்னா... முதல்ல அதுக்கு நாம தயாராகிக்கணும்.

ஒரு பெரியவர் கிட்ட ஒரு அம்மா தன்னோட பிள்ளையைத் தூக்கிட்டு வந்தாங்க!

'என்னம்மா விடயம்? என்று கேட்டார் அந்தப் பெரியவர். "ஐயா! என் பிள்ளை எப்ப பார்த்தாலும் வெல்லத்தையே சாப்பிட்டுக்கொண்டிருக்கான். சொன்னா கேட்க மாட்டேங்கிறான். நீங்கதான் அவனுக்கு நல்ல புத்தி சொல்லணும்.!" அப்படி என்றார் அந்த அம்மா.

அந்தப் பெரியவர் பார்த்தார். கொஞ்ச நேரம் யோசிச்சார். "சரியம்மா! நீ போய் ஒரு வாரம் கழிச்சு வா!" அப்படி என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

இந்த அம்மா குழந்தையைத் தூக்கிட்டுப் போய்ட்டாங்க! ஒரு வாரம் கழிச்சு மறுபடியும் வந்தாங்க குழந்தையோட. அந்தப் பெரியவர் அந்த குழந்தைக் கிட்ட வெல்லம் சாப்பிடக் கூடாது என்று சொல்லி நிறைய புத்திமதியெல்லாம் சொன்னார்.

"சரியம்மா... இனிமே இவன் வெல்லம் சாப்பிட மாட்டான் போயிட்டு வா! என்று சொன்னார்.

இந்த நேரத்தில அந்த அம்மாவுக்கு ஒரு சந்தேகம். கொஞ்சம் தயங்கிக்கொண்டே நின்றுகொண்டிருந்தாங்க. 'என்னம்மா யோசிக்கிற?" என்று கேட்டார் பெரியவர். "ம்... ஒன்றுமில்லைங்க. இப்ப நீங்க சொன்ன இந்த புத்திமதியை என்னத்துக்கு ஒரு வாரம் கழிச்சு மறுபடியும் என்னை வரச் சொன்னீங்க?" என்று கேட்டார் அந்த அம்மா.

இதுக்கு அந்தப் பெரியவர்.

"அப்படி இல்லையம்மா! ஒரு வாரம் கழிச்சு உன்னை வரச்சொன்னதுக்கு காரணம் இருக்கு!

போன தடவை நீ வந்தப்போ இந்த புத்திமதியை நான் ஏன் சொல்லவில்லை என்றால் அதுவரைக்கும் நானும் அதிகமாக வெல்லம் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். இந்த ஒரு வார காலத்தில்தான் கொஞ்சம் கொஞ்சமாக விட்டிட்டேன்.

இப்ப நான் வெல்லம் சாப்பிடுவதில்லை.

அதனாலே இப்பத்தான் அந்த அறிவுரை சொல்லக்கூடிய தகுதி எனக்கு வந்திருக்கு. அதனாலேதான் அப்படிச் சொன்னேன்!" என்றார்.

இந்தக் காலத்தில 'அறிவுரை' பண்றதுக்கு ஆள் நிறைய இருக்காங்க!

ஆனா 'அறிவுரை' பண்ற தகுதி அவங்களுக்கு இருக்கணும்.

பல 'அறிவுரை' களுக்கு மரியாதை இல்லாமல் போறதே இந்த காரணத்தினால் தான்.


அஹிம்சையைப் பற்றி பாடம் நடத்தப் போறேன்னு வந்தார் ஒருத்தர்!

அவருக்கு என்ன தொழில் என்று விசாரிச்சாங்க.

"கசாப்புக் கடை" வைச்சிருக்காராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக ஹலிம்தீன் நியமனம்



(மன்னார்)

மன்னார் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் பதவிக்கு, இலங்கை திட்டமிடல் சேவையைச் சேர்ந்த மாவட்ட செயலகத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எச். ஹலிம்தீன் மன்னார் மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளராக, மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரனின் முன்னிலையில் தனது கடமைகளை நேற்று திங்கட்கிழமை பொறுப்பேற்றார்.

இதன்போது மேலதிக மாவட்ட செயலாளர்கள் (நிர்வாகம் மற்றும் காணி),பிரதம கணக்காளர், பிரதம உள்ளக கணக்காய்வாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்ட செயலாளர் மற்றும் திட்டமிடல் கிளையின் அனைத்து உத்தியோகத்தர்களும் பங்கேற்றனர். (நி-6)

# யாழில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பதில் அமைச்சு கரிசனை

## விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பொதுவான உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பது தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் கரிசனையாக உள்ளதாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழில் இடம்பெற்ற யாழ். மாவட்ட தேசிய இளைஞர்சேவை மன்றத்தின் தேசிய ரீதியில் சாதனை புரிந்த வடக்கு மாகாண வீர, வீராங்கனைகளை கௌரவிக்கும் வர்ண இரவு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ளக விளையாட்டு அரங்கை அமைப்பது தொடர்பில் எமது அமைச்சு கரிசனையாகவே உள்ளது. அதற்கான இடத்தையும் திட்டச் செலவுகளையும் மதிப்பிடுமாறு மாவட்ட உதவி பணிப்பாளரிடம் கூறியுள்ளேன்.

தற்போது அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்குள் இருக்கின்ற நிலையில் அமைச்சால் பாரிய நிதிய ஒதுக்கீடுகளை மேற்கொள்வதில் சிரமம் இருக்கிறது.

ஆனாலும், யாழில் உள்ள விளையாட்டு அரங்கை அமைப்பது தொடர்பில் வெளிநாட்டு நிறுவனங்கள், புலம்பெயர் கொடையாளர்களிடமிருந்து உதவிகளைப் பெற முடியும். மேலும் தெரிவிக்கையில்,



யாழ்.மாவட்ட வீரர்களுக்கு உள்ளக விளையாட்டுகளில் தேசிய ரீதியில் சாதிப்பதற்கு மைதானம் இல்லை என்பது குறையாக இருந்தாலும் அதனை நிவர்த்தி செய்வதற்கு எங்களால் ஆன பங்களிப்பை வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)

# சான்றுப்பொருட்களை உரிமை கோரல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 431(3) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் வாகன இல AR/420/23, மோ.சைக்கிள். NP XA-5747, AR/421/23, மோ.சைக்கிள். NP XO - 2660, AR/422/23, மோ.சைக்கிள். NP BFI-5758, AR/423/23, மோ.சைக்கிள் NP VF -9587 ஆகிய இலக்கங்களைக் கொண்ட வழக்குகளில் உள்ள சான்றுப்பொருட்களான வாகனங்களை சான்றுப்பொருட்களின் உரிமையாளர் யாராவது இருந்தால் தகுந்த அடையாளத்தை உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளுமாறும் அவ்வாறு உரிமை கோரப்படாத விடத்து 2 மாதங்களின் பின் எதுவிதமான முன் அறிவித்தல்கள் வழங்கப்படாது சான்றுப்பொருட்கள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)




நிவேதா உதயராஜன் எழுதிய மனமும் இடம்பெயரும் எனும் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படம்: தேவானந்தம்)

# மன்னார் மருத்துவமனை வளாகத்தில் பொலித்தீன் பாவனைக்கு தடை

(மன்னார்)

மன்னார் பொது மருத்துவமனை வளாகத்தினுள் உடன் அமுலுக்கு வரும் வகையில் பொலித்தீன் பாவனை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மருத்துவமனை சூழல் மற்றும் பொது இடங்களில் அதிகரித்துவரும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையால் சூழல் மாசடைவதையும் அதே நேரம் மழைக்காலங்களில் சிதறிக் கிடக்கும் பொலித்தீன் பைகளில் இருந்து டெங்கு நுளம்பு பரவல் அதிகரித்து காணப்படுவதன் அடிப்படையிலும் மன்னார் மருத்துவமனையில் முதல் கட்டமாக பொலித்தீன் பைகளின் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.



குறிப்பாக சிகிச்சைக்காக வருபவர்கள், நோயாளர்களை பார்வையிட வருபவர்கள் பொலித்தீன் பைகளுக்கு பதிலாக உக்கக் கூடிய அல்லது மீள் பயன படுத்த கூடிய பைகளை கொண்டு வருமாறு மருத்துவமனை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதேநேரம் பொலித்தீன் பைகளுடன் வருபவர்களிடம் இருந்து பொலித்தீன் பைகள் வாங்கப்பட்டு மாற்றீட்டு பைகள் தற்காலிகமாக மருத்துவமனை நிர்வாகத்தினரால் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-285)

# வட்டுவாகல் ஆற்றுப் பகுதியில் சுற்றுலா மையம் வேண்டும்

## பொதுஅமைப்புகள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு வட்டுவாகல் ஆற்றின் ஆலடி மரச்சூழலை சுற்றுலா மையமாக மாற்றுமாறு பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

பல இடங்களில் இருந்து வட்டுவாகல் ஆற்றுப் பகுதிக்கு பெருமளவு சுற்றுலா பயணிகள் வருகை தரும் நிலையில் இப்பகுதியில் குடிநீர், பொது மலசலகூட வசதிகள் ஏற்படுத்தப்படாத நிலைமை காணப்படுகின்றது. வட்டுவாகல் ஆற்றுப் பகுதியில் சுற்றுலா மையம் ஒன்றினை உருவாக்குமாறு கடந்த காலங்களில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்டும் இது வரை நிறைவேற்றப்படாமலே உள்ளன.

இந்நிலையில் வட்டுவாகல் ஆற்றுக்கு அருகில் உள்ள ஆலமரச் சந்தியினை சுற்றுலா மையமாக உருவாக்குவதன் மூலம் சுற்றுலா வருபவர்கள் நன்மையடைவார்கள் என பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன. (நி-6-350)

# மின்குமிழ்கள் பொருத்தும் பணிகளை துரிதப்படுத்துங்கள்

## வன்னொளி விளையாட்டுக்கழகம்

(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் வன்னொளி விளையாட்டுக் கழகத்தின் மைதானத்திற்கு மின்குமிழ்கள் பொருத்துவதற்கு என பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் அவ்வேலைகள் முழுமையாக நிறைவு பெறவில்லை என அவ்விளையாட்டுக் கழக வீரர்கள் தெரிவித்தனர்.

கரைச்சி பிரதேச சபையினால் 2022, 2023 ஆம் ஆண்டுகளில் வன்னொளி விளையாட்டுக் கழக மைதானத்திற்கு மின்குமிழ்கள் பொருத்துவதற்கு என பெருமளவு நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் அவ்வேலைகள் முழுமையாக நிறைவு பெறவில்லை. இது தொடர்பில் மைதானத்திற்கு மின்குமிழ்களை பொருத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என அவ்விளையாட்டு வீரர்கள் தெரிவித்தனர். (நி-6)

# பட்டத்திருவிழாவில் இளைஞனொருவரை விசாரணைக்கு உட்படுத்திய பொலிஸார்

## முல்லையில் சம்பவம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு கடற்கரையில் பட்டத்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வல்வெட்டித்துறையில் வருடாவருடம் பட்டத்திருவிழாவை மேற்கொள்ளுபவர்களால் முல்லைத்தீவு கடற்கரையில் முன்னெடுக்கப்படும்.

குறித்த பட்ட திருவிழாவில் முல்லைத்தீவினை சேர்ந்த இளைஞர் ஒருவர் பட்டத்தில் தமிழீழ வரைபடம், கார்த்திகை பூ படம் அமைப்பில் உருவாக்கப்பட்ட பட்டத்தினை ஏற்றியதை அவதானித்ததாக கூறி முல்லைத்தீவு பொலிஸார் அவ்விடத்திற்கு சென்று குறித்த இளைஞனை விசாரணைக்கு உட்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-299)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 392





அவருடன் போட்டியிட மதுராந்தகத்தேவர் இருக்கிறார். ஆகையால் இந்த இலங்கைத்தீவில் இவர் ஒரு தனி ராஜ்யத்தை ஸ்தாபித்துச் சுதந்திர மன்னராக விரும்புகிறார் போலும்! யார் கண்டது? இவருடைய விருப்பம் நிறைவேறினாலும் நிறைவேறலாம்! குடந்தை சோதிடர் சொன்னார் அல்லவா? "அருள்மொழிவர்மர் துருவ நட்சத்திரம் போன்றவர்! அவரை நம்பினவர்களுக்கு ஒரு குறையும் இல்லை!" என்று அத்தகைய வீர புருஷரிடம் தான் வந்து சேர்ந்துவிட்டதை நினைத்து அவனுடைய உள்ளம் மகிழ்ச்சியால் பூரித்தது.

வெளிப்புறங்கள் இடிந்து இருளடைந்திருந்த ஒரு பழைய மாளிகையின் வாசலில் வந்து அவர்கள் நின்றார்கள். குதிரைகளின் மீதிருந்து இறங்கினார்கள். அந்த இடம் முக்கியமான வீதிகளிலிருந்து சற்று ஒதுக்குப்புறமாக இருந்தது. ஆகையால் அங்கே ஜனக் கூட்டம் இல்லை. இளவரசர் மூன்று தடவை கையைத் தட்டினார். உடனே இந்திர ஜாலத்தினால் நடந்தது போல் அந்த மாளிகையின் ஒரு பக்கத்தில் கதவு திறந்து வழி உண்டாயிற்று. ஆட்கள் யாருமே இருந்ததாகத் தெரியவில்லை. இளவரசர் இருட்டிலேயே நுழைந்து மேலே சென்றார். வந்தியத்தேவன் பின்னால் திரும்பிக் குதிரைகளின் கதி என்னவென்று ஆவலுடன் பார்த்தான். இளவரசர், "குதிரைகளுக்கு வழி தெரியும்!" என்று கூறி வந்தியத்தேவனைக் கையைப்பிடித்து இழுத்துச் சென்றார். சற்றுத் தூரம் இருளிலேயே நடந்தார்கள். பிறகு 'மினுக் மினுக்'கென்று வெளிச்சம் தெரிந்தது. பின்னர் பிரகாசமான ஒளி தென்பட்டது. அது ஒரு பழைய காலத்து அரண்மனையின் உட்புறம் என்று வந்தியத்தேவன் கண்டான்.

"இங்கே கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும். மகாசேன சக்கரவர்த்தியின் அந்தப்புரம் இது. திடீரென்று சக்கரவர்த்தி விஜயம் செய்து நம்மைத் துரத்தப் பார்த்தாலும் பார்ப்பார்!" என்றார் இளவரசர்.

"மகாசேனர் என்பவர் யார்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"மகாசேனர் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த இலங்கா ராஜ்யத்தை ஆண்ட சக்கரவர்த்தி. அவர் பொது ஜனங்களுக்குப் பல நன்மைகளைச் செய்தார். ஆகையால் அவருடைய ஆவி இந்த நகரத்தில் இன்னமும் உலாவிக் கொண்டிருப்பதாக ஜனங்கள் நினைக்கிறார்கள். அவருடைய ஆவியானது துணியில்லாமல் குளிரில் கஷ்டப்படப் போகிறதே என்று மரக் கிளைகளில் துணிகளைக் கட்டித் தொங்க விடுகிறார்கள்! இந்த அரண்மனையிலும் அவருக்குப் பிறகு யாரும் வசிப்பதில்லை. வெறுமனே தான் விட்டு வைத்திருக்கிறார்கள்!" என்றார் இளவரசர்.

இளவரசருக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் பணிவிடை செய்ய அங்கு ஏவலாளர் இருந்தார்கள். குளித்து உணவருந்திய பிறகு மூவரும் அந்த அரண்மனையின் உச்சி மாடத்துக்குச் சென்றார்கள். அவர்கள் இருந்த இடத்திலிருந்து சுற்றுப்புறமெங்கும் பார்க்கலாம். ஆனால் அவர்களைக் கீழேயுள்ளவர்கள் பார்க்க முடியாது. அப்படிப்பட்ட இடத்தில் போய் அமர்ந்தார்கள்.

"ஐயா! பன்னிரெண்டு நாழிகைக்கு எங்கேயோ வரும்படி புத்தர் சிலை, செய்தி சொன்னதாகக் கூறினீர்களே?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இன்னும் நேரமிருக்கிறது. சந்திரன் இப்போது தானே உதயமாயிருக்கிறான்? அதோ அந்தத் 'தாகபா'வின் உச்சிக்கு நேரே சந்திரன் வந்ததும் புறப்பட்டு விடுவோம்!" என்றார் இளவரசர்.

அவர் சுட்டிக்காட்டிய இடத்தில் ஒரு பெரிய குன்று போன்ற தாகபா ஸ்தூபம் நின்றது. புத்தர் பெருமானுடைய திருமேனியின் துகளை அடியில் வைத்து எழுப்பிய ஸ்தூபங்களாதலால் அவை 'தாது கர்ப்பம்' என்று அழைக்கப்பட்டன. தாது கர்ப்பம் என்னும் பெயர்தான் பின்னர் 'தாகபா' ஆயிற்று.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்


## ஆடு மேய்ப்பவரும் காட்டு ஆடுகளும்

ஒரு நகரத்திலே இருக்கிற வீட்டில ஒரு நாய்க்குட்டி இருந்திச்சு.

அந்த நாய்க்குட்டிய ரொம்ப செல்லமா வளர்த்தாங்க அந்த வீட்டை சேர்ந்தவங்க.

தினமும் வேலைக்கு போற வீட்டோட தலைவருக்கு சாப்பாடு எடுத்துட்டு போற வேலையை அந்த நாய்க்குட்டி செஞ்சிச்சு.

கூடையில் வைக்கிற சாப்பாட்டு கிண்ணத்த கீழே சிந்தாம சரியாக தன்னோட எஜமானருக்கு கொண்டு



போய் கொடுத்துவிடும் அந்த நாய்க்குட்டி.

அதனால அந்த நாய்க்குட்டிக்கு ரொம்ப மரியாதை அந்த வீட்டில.

இத பார்த்த பக்கத்து வீட்டு நாய்களுக்கு ரொம்ப பொறாமையா இருந்திச்சு.

அதனால தினமும் சாப்பாடு கொண்டு போற நாய்க்கு அறிவுரை சொல்லி அந்த சாப்பாட்ட சாப்பிட பாத்துச்சுங்க அந்த நாய்கள் கூட்டம்.

ஆனா அந்த நாய்கள் கிட்ட இருந்து தப்பிச்சு தன்னோட எஜமானருக்கு சாப்பாட்ட சரியா கொண்டு போய் சேர்த்திடும் அந்த நாய்.

கொஞ்ச நாளுக்கு அப்புறமா மற்ற நாய்கள் எல்லாம் சேர்ந்து அந்த நேர்மையான நாய்க்குட்டிய கிண்டலும் கேலியும் செய்ய ஆரம்பிச்சுங்க.

அத கேட்டு சங்கடப்பட்டு அந்த நாய் அன்னைக்கு கொடுத்து அனுப்பிய சாப்பாட சாப்பிட ஆரம்பிச்சுச்சு.

அத பார்த்த மற்ற நாய்கள் எல்லாம் ஒண்ணா சேர்ந்து சத்தம் போட்டு சிரிச்சிச்சுங்க.

இங்க பாருங்க இது தான் புகழ் பெற்ற நம்பிக்கை நாய். இத்தன நாள் ஊர ஏமாத்திட்டு இன்னைக்கு எஜமானரோட சாப்பாட்டை சாப்பிடுது பாருங்கன்னு சொல்லி சிரிச்சுச்சுங்க.

மற்ற நாய்களோட கேலி கிண்டலுக்கு ஆளான நேர்மையான நாய் தன்னோட நேர்மைய தவறவிட்டதுக்காக ரொம்ப வருத்தப்பட்டுச்சு.

நீதி : மற்றவர் கருத்தை வைத்து உங்கள் பழக்கங்களை மாற்ற வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர் வழியில் அடைய முடியாததை ஒருநாளும் குறுகிய வழியில் அடைந்துவிட முடியாது.

~ கதே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ‘தியாகம்’ என்பது இப்போது எங்களிடம் சொல்லில் மட்டுமே

“தியாகம்” என்பதன் உன்னதம் வெறும் வார்த்தைகளில் இருப்பதில்லை.

ஒரு காலத்தில் எங்கள் ஈழத்திருநாட்டில் “தியாகம்” மலிந்திருந்தது.

ஆம், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து மண் மீட்புப் போரில் களமாடிய எங்கள் பிள்ளைகள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்ததை நினைத்துப் பார்க்கும்போது, அவர்களின் தியாகம் எத்துணை உன்னதமானதென்பது உணரப்படும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு என்று அஸ்தமனமாகியதோ அதன்பின்னர் அவர்கள் செய்த தியாகத்தைத் தமது முதலீடாக்கி, தங்களின் சொந்தச் சீவியம் நடத்த முற்பட்டவர்களே அதிகம் எனலாம்.

உண்மை, புலம்பெயர் நாடுகளில் விடுதலைப் புலிகளின் சொத்துக்களைத் தமதாக்க சிற்சில குழுக்கள் நாடகமாடுகின்றன.

ஏதோ தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைத் தாம் முன்னெடுப்பது போலவும் இலங்கையில் நடந்த போர்க்குற்றங்களைத் தாமே ஞாபகப்படுத்துவதுபோலவும் விளம்பரப்படுத்துகின்றவர்களின் உள்நோக்கமெல்லாம் விடுதலைப் புலிகள் அமைப்புக்குச் சொந்தமான பெருந்தொகைப் பணத்தை தாம் கையாடுவதேயன்றி வேறில்லை.

இத்தகையவர்களின் ஏமாற்று நாடகங்களுக்கு இங்குள்ள சில விலாங்குகள் தாளம் போடுகின்றன.

உண்மை. அரச புலனாய்வுக்கு வாலும் புலம்பெயர் நாடுகளில், புலிகளின் சொத்துக்களைக் கபளீகரம் செய்கின்றவர்களுக்குத் தலையும் காட்டுகின்ற விலாங்குகள் எங்கள் இனத்துக்குச் செய்கின்ற ஈனத்தைத் தோலுரிக்க ஆளில்லாத நிலையில், எல்லா அக்கிரமங்களும் அரங்கேறுகின்றன.

ஆம், தமிழ் மக்கள் எத்தனையோ துன்பங்களோடு இங்கு வாழுகின்றனர்.

போர்க்காலத்தில் ஏற்பட்ட இழப்புகளில் இருந்து அவர்களால் இன்னமும் மீளமுடியவில்லை.

மண்மீட்புக் கனவோடு சென்றவர்கள் இப்போது வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர்.

மாவீரர்களின் குடும்பங்கள் மௌனமாகத் தங்கள் வாழ்க்கையைக் கழிக்கின்றன.

இதற்கு மேலாக, தமிழ் அரசியல் கைதிகளின் அவலம் சொல்லிமாளா.

இதுமட்டுமல்ல போர்க்கால சூழலில் இடம்பெயர்ந்து அங்கும் இங்குமாக அலைந்து யுத்தத்தின் முடிவில் வெறுங்கையோடு ஊர் திரும்பியவர்கள் இன்று வறுமையின் பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றனர்.

எனினும் இவற்றையெல்லாம் கண்டுகொள்ளாதவர்கள் தங்களை இனப் பற்றாளர்களாகக் காட்ட முற்பட்டுள்ளனர்.

உண்மையில் எங்கள் தமிழ் இனத்தின் தியாகம் என்பது வெறும் வார்த்தையில் மட்டுமே இப்போது உலா வருகிறது.

மற்றும்படி சுயநலம் இமயம் போல் உயர்ந்து நிற்கிறது. நடிப்பு ஆகாயத்தை முட்டுகிறது. உள்ளொன்றும் புறமொன்றுமாகப் பேசுகின்ற கபடனத்தனம் கடல் ஆழத்தைக் கடந்து நிற்கிறது.

இந்நிலையில் அப்பாவித் தமிழ் மக்கள் இன்னமும் இவற்றை நம்புகின்றவர்களாக...

என் செய்வது பொய்மை விஸ்வரூபமெடுக்கும்போது அதைத் தடுக்க, இன்னொரு அவதாரம் தேவையல்லவா.

# இணைய பாதுகாப்புச் சட்டமூலம் மக்களின் வாயைமூட அரசு முயற்சி

## ஹிருணிகா எம்.பி விசனம்

(கொழும்பு)

இணைய பாதுகாப்புச் சட்டமூலத்தின் ஊடாக மக்களின் வாயை மூட அரசாங்கம் தீவிரமாக முயற்சி செய்து வருவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர விசனம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

“கடந்த காலங்களில் நாட்டில் சமூக ஊடகங்கள் பாரிய சேவைகளை ஆற்றியுள்ளன. ஜனாதிபதி முதற்கொண்டு ஒட்டுமொத்த அரசாங்கமே சமூக ஊடகங்களினால் விரட்டியடிக்கப்பட்டது.

அரசியல்வாதிகள் செய்யும் அனைத்து குற்றச்செயல்களும் இதனால் வெளியே வந்தன. பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான செயற்பாடுகள், மத வெறுப்புப் பிரசாரங்களை கட்டுப்படுத்தவே இணையப் பாதுகாப்புச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகிறது.

ஆனால், இவற்றை கட்டுப்படுத்த போதுமான சட்டங்கள் தற்போதும் நாட்டில் உள்ளன. இந்த நிலையில், யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையிலும் பலரின் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. ஒரு நாளைக்கு குறைந்தது ஒருவரேனும், துப்பாக்கிச் சூட்டில் உயிரிழக்கிறார்.

இதற்கு ஐ.நா. எதிர்ப்பினை வெளியிட்டுள்ள நிலையில், ஐ.நா. தெரிவிப்பதை கவனத்தில் கொள்ளப்போவதில்லை என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். அப்படியென்றால், ஐ.நா. அமைப்பிலிருந்து இலங்கை விலகவேண்டும். அமைச்சரின் இந்த முட்டாள் தனமான கருத்தினால், நாட்டு மக்கள் தான் பாதிக்கப்படுவார்கள். நாட்டை முன்னேற்ற வேண்டுமெனில், முதலில் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும்” இவ்வாறு ஹிருணிகா தெரிவித்துள்ளார். (ம-7)

### சாந்தனுக்கு சிகிச்சையளிப்பதோடு

# குடும்பத்தினருடன் இணைக்க உடன் நடவடிக்கை எடுக்குக

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டுகோள்

(கொழும்பு)

இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சாந்தனுக்கு சிகிச்சையளிப்பதற்கும், குடும்பத்தினருடன் இணைக்கவும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய மற்றும் இலங்கை அரசிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

முன்னாள் இந்திய பிரதமர் ராஜிவ்காந்தி அவர்களுடைய கொலை வழக்குத் தொடர்பில் நீண்ட காலமாக சிறைத்தண்டனை அனுபவித்தவர்கள், இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டிருந்தும், அவர்கள் சிறப்பு முகாமிலே தடுத்து வைக்கப்பட்டு சிறைக் கைதிகள் போன்று தமது வாழ்வை அனுபவித்து வருகின்றனர்.

இவர்களில் இலங்கையைச் சேர்ந்தவர்கள், தாங்கள் இலங்கைக்கு சென்று குடும்பத்தினருடன் இணைத்து வாழ அனுமதி கோரிய போதும் இன்று வரை அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை.

இத்தகைய நிலையில் சாந்தன் குடும்பத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க இம்மாதம் 03ம் திகதி இந்தியத் துணைத் தூதுவரை தமிழ்த் தேசிய மக்கள் சந்தித்திருந்த போது, இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர்கள் தமது குடும்பங்களோடு இணைந்து வாழ வழியேற்படுத்தி கொடுக்குமாறும் கேட்டிருந்தோம்.

இத்தகைய நிலையில், சுகயீனம் காரணமாக சாந்தனின் உடல் நிலை மிக மோசமாக சென்றிருப்பதானது, அனைத்து தமிழ் மக்கள் மத்தியிலும் பாரிய ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

சாந்தனின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டும் இந்த அவசர சூழ்நிலையை கவனத்தில் எடுத்தும் - இந்திய மத்திய அரசும், தமிழக அரசும், இலங்கை அரசும் உடனடியாக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொண்டு அவரை ஆபத்தான நிலையிலிருந்து மீட்டெடுத்து இலங்கைக்கு மீளத்திரும்பி குடும்பத்தினருடன் இணைந்து வாழ்வதற்கு ஆவன செய்ய வேண்டும்.

குறித்த வழக்கோடு சம்பந்தப்பட்டு உச்ச நீதிமன்றினால் விடுவிக்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்த ஏனையவர்களும் தங்கள் குடும்பங்களோடு இணைந்து வாழ காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவசரமான வேண்டுகோளை விடுக்கின்றோம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

### 2025 ஆம் ஆண்டு முதல்

# புதிய சொத்து வரியை அறிமுகப் படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டில் புதிய சொத்து வரியை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக நிதி ராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அதற்காக மறைமுக வரிகளை அறிமுகப்படுத்தவில்லை. வரிகளை அதிகரிக்கும் நோக்கமும் அரசாங்கத்திற்கு இல்லை.

பொருட்களின் கேள்விகள் மற்றும் விநியோகத்தின் அடிப்படையிலேயே அவற்றின் விலைகள் தீர்மானிக்கப்படும்.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் புதிய சொத்து வரியை அறிமுகப்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

இந்த சொத்து வரியானது நேரடியான வரியாகவே உள்ளது. பெரிய சொத்துக்கள் இருக்கும் நபர்களிடம் இருந்து இந்த சொத்து வரி அறவிடப்படும்.

அத்தோடு, 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரஜைகளுக்கும் டின் இலக்கம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஆனால் இதில் பல பிரச்சினைகளை இனங்கண்டுள்ளோம். உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சில தொழில்நுட்ப சாதனங்கள் இல்லை. கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற நீண்ட மீளாய்வுக் கூட்டத்தின் போது, இந்தப் பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

குறிப்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ஆட்களை சேர்ப்பதற்கு அனுமதி வழங்குதல், பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் பட்டதாரிகளை பணியமர்த்துதல் உள்ளிட்ட பல தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது” இவ்வாறு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
# முதலிரு மேற்கத்தய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III

**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

11

யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது பகைவர் படை எடுக்காமல் இருப்பதற்கு யாழ்ப்பாணம், மன்னார் என்ற இரு இடங்களும் பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்பதற்காக "கப்ரின்மேஜர்" ஒருவனின் பொறுப்பில் அவை விடப்பட்டன.

மத்திய அரசாங்கம் உயர்ந்த இராணுவ அதிகாரியின் பொறுப்பில் இருந்தது. ஆரம்பத்திலிருந்தே போர்த்துக்கேய ஆட்சி இலங்கையில் இராணுவ ஆட்சியாக இருந்தது. அடிக்கடி யுத்தங்கள் நிகழ்ந்ததால் அந்த இராணுவ ஆட்சி இறுதிக்காலம் வரை தொடர்ந்து நடைபெற்றது. இலங்கையில் போர்த்துக்கேயருக்குரிய பகுதிகள் முழுவதையும் பரிபாலித்த பிரதான அதிகாரி "கப்ரின் ஜெனரல்" என அழைக்கப்பட்டான். கப்ரின் ஜெனரல் என்பது பிரதம சேனாதிபதி என பொருள்படும்.

இவனுக்கு மேலதிகாரியாக இருந்தவன் கோவை இராஜப் பிரதிநிதியேயாவன். கோவை இராஜப் பிரதிநிதி இடும் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டியவன் இலங்கை "கப்ரின்ஜெனரல்". இவனது உத்தியோக வாசஸ்தானம் கொழும்புக்கு அண்மையாகவுள்ள மல்வானை என்னும் இடத்தில் இருந்தது. நிதி விடயமான பரிபாலனத்திலும் நீதிபரிபாலனத்திலும் "கப்ரின் ஜெனரலுக்கு உதவி செய்ய இரு உயர்தர அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். நிதி விடயமான அதிகாரியை "வெடோர் டிவாஸண்டா" என்றும் நீதிபரிபாலன அதிகாரியை "ஒளவி டோர்" என்றும் போர்த்துக்கேய பாஷையில் கூறினர். தமிழில் முறையே நிதி அதிகாரி என்றும் நீதி அதிகாரி என்றும் அவர்களைக் கூறலாம்.

### கொழும்பு பட்டின சங்கம்

கொழும்பை "கமற" என்று போர்த்துக்கேய பாஷையில் வழங்கப்பட்ட ஒரு பட்டின சங்கம் பரிபாலித்தது. அந்நகரத்துக்குள் 1500 வினைஞரும் 900 உயர் குலப் போர்த்துக்கேய குடும்பத்தினரும் வாழ்ந்தனர். பல கிறிஸ்தவ தேவாலயங்களும் கன்னிகாஸ்திரி மடங்களும் வறியவர்களைப் போஷிக்கும் விடுதி ஒன்றும் ஆஸ்பத்திரி ஒன்றும் அங்கே இருந்தன. இப்போது கோட்டைப் பகுதியில் கான் மணிக்கூண்டுக் கோபுரம் இருக்கும் இடத்திலே ஓர் யேசுசபைக் கல்லூரியும் இருந்தது.

### மாகாண அரசியற் பரிபாலனம்

மாகாண அரசியற் பரிபாலனம் அநேகமாகப் பழைய சிங்கள முறையையே ஒட்டியிருந்தது. ஒவ்வோர் மாகாணத்துத் திசாவையும் தன் தன் பகுதியில் ஊர்ப் பரிபாலனம், நீதிபரிபாலனம் என்பவற்றை ஆற்றுவதோடு இராணுவ சம்பந்தமான கடமைகளையும் ஆற்ற வேண்டியவனாயிருந்தான். அரசனுக்குச் சேர வேண்டிய அரசிறையைச் சேகரித்தல், ஊரவர்களுக்கிடையே நிகழும் பிரச்சினைகளை விசாரணை செய்து தீர்த்தல், உள்ளூரில் மானியமுறையிற் சேர்க்கப்படும் குடிபடைகளைப் போருக்குஇட்டுச் செல்லல் என்பன ஒவ்வோர் திசாவையின் கடமையாக இருந்தன. திசாவைகளுக்குக் கீழ் கோரளைகள் இருந்தனர். இவர்களுக்கும் திசாவைகளுக்கும் இருந்த கடமைகள் போன்ற கடமைகள் உண்டு.

கோரளைகளுக்குக் கீழ் அத்துக் கோரளைமார், விதானைமார், சிறு தலைமைக்காரர் என்பவர்கள் இருந்தனர். கோரளைமார், அத்துக் கோரளைமார் என்பவர்கள் அநேகமாகப் போர்த்துக்கேயராகவே இருந்தனர். விதானைமாராகவும் அவர்கள் இருந்ததுண்டு. சிறுதலைமைக்காரராகச் சிங்களவர் இருந்து போர்த்துக்கேயருக்குச் சேவை செய்தனர்.

### அரசிறை சேகரிப்பு

அரசிறை பல விதங்களாற் சேகரிக்கப்பட்டது. கோட்டை அரசனின் உரிமைக்காரன் என்ற நியதியில் போர்த்துக்கேய அரசனுக்கே நிலம் முழுவதும் சொந்தமாயிருந்தது. அந்நிலத்தின் பொருட்டு ஊரவர் தானியமாக இறை செலுத்த வேண்டும். அல்லது இராஜகாரிய ஊழியம் செய்ய வேண்டும். போர்த்துக்கேய அரசர்கள் தமது பரிபாலனத்தில் உள்ள கிராமங்களை போர்த்துக்கேய பாஷையில் "வொரேயரோஸ்" என்று வழங்கப்பட்ட குத்தகைக்காரருக்குக் குத்தகையாகக் கொடுத்துவிடுவர்.

இக்குத்தகைக்காரர் தமது சொந்த ஆதாயம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு கிராம நிலையங்களில் இருந்து எவ்வளவை வசூலிக்க முடியுமோ அவ்வளவையும் வசூலித்தும் கிராம மக்களைக் கொண்டு எந்த நேரமும் துன்புறுத்தியும் ஊழியம் செய்வித்தனர். இப்படியான அரசிறையை விட இரத்தினங்கள், முத்துக்கள், கறுவா, பாக்கு, மிளகு, யானை என்பவற்றை விற்பதற்குப் போர்த்துக்கேய அரசருக்கு மாத்திரமே இருந்த ஏகபோக உரிமையால் பெரும் தொகையான வருமானம் கிடைத்தது.

இதனைவிட பூதல்வரியினலும் போர்த்துக்கேயர் வருவாய் பெற்றனர். பூதல்வரியினால் இடைஞ்சற்பட்டவர்கள் கிறிஸ்தவர்களல்லாதோர் ஆவர். அவர்கள் தமக்குக் கிடைக்கும் ஆதனத்தின் பெறுமதியில் மூன்றில் ஒரு பங்கை வரியாக அரசாங்கத்துக்கு கொடுக்க வேண்டும் என விதிக்கப்பட்டனர். நீதித்தலங்களில் விதிக்கப்படும் அபராதப் பணம் இன்னோர்வித வருமானமாக இருந்தது. இப்பணங்கள் எல்லாம் மேலே கூறிய "வெடோர் டி வாஸண்டா" என்னும் நிதி அதிகாரியின் பரிபாலனத்தில் இருந்த அரசாங்கத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டன.

மாகாண நீதிபரிபாலனத்தை அவ்அவ் மாகாணத்துத் திசாவைமார் செய்து வந்தனர். அத்துடன் "ஒளவிடோர்" என்ற நீதிபரிபாலன அதிகாரி நீதிபரிபாலனம் செய்தற்பொருட்டு வருடம் ஒரு முறை மாகாணங்களுக்கு விஜயம் செய்வர். 'மரலபடா" என்ற பூதல் வரியைச் சேகரிக்கும் நோக்கமாகவும் வழக்குகளை விசாரணை செய்யும் நோக்கத்துக்குமாக "ஒளவிடோர்" இவ்வாறு மாகாணங்களுக்கு விஜயம் செய்வர்.

மத்தியகால ஐரோப்பாவில் விசாரணைக்கு வரும் எதிரிகளுக்குச் சித்திரவதை செய்து அவர்களிடம் இருந்து உண்மை அறியும் முறை இருந்தது. இந்த முறையையே போர்த்துக்கேயரும் நீதிபரிபாலன விடயத்தில் இங்கு அனுஷ்டித்தனர்.

இலங்கையில் போர்த்துக்கேயர் அதிகாரம் அனுகூலம் அடையவில்லை. அரசாங்கம் எப்போதும் கடனாளியாகவே இருந்தது என்று கேயிரோஸ் சுவாமியார் எழுதியிருக்கிறார். இப்படியான கேவல நிலைமைக்குப் பிரதான காரணம், "வெடோர்டி வாஸெண்டா", "ஒளவிடோர்" என்னும் அதிகாரிகள் உட்படச் சகல உத்தியோகத்தர்களும் தம் சுயநலம் கருதிக் கருமம் ஆற்றியமையே ஆகும்.

போர்த்துக்கேய உத்தியோகத்தரான சுயநலமிகள் கிறிஸ்தவ திருச்சபைக்குச் சேர வேண்டிய வருவாயையும் அபகரித்துத் தமதாக்கினர். இப்படியெல்லாம் செய்தாலும் பொதுஜனங்களைக் கண்ணியமான முறையிற் பரிபாலித்தனரோ என்றால் அதுவும் இல்லை. ஊரவர்கள் போர்த்துக்கேய ஆட்சியை வெறுத்தனர்.

தேசத்துச் சட்டங்க ளைப் பேணி அவற்றின் பிரகாரம் பரிபாலிக்க மல்வானை உடன்படிக் கையில் வாக்குறுதி செய்த போர்த் துக்கேய அதிகாரிகள் அச்சட்டங் களை நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை. ஊரவர்கள் வெறுப்புக் கொண்டதற்கு இது ஓர் காரணமாகும்.

மானியமுறை நடைபெறும் தேசத்திலே ஒவ்வொரு பிரஜையும் கொடுக்க வேண்டிய தானியம் இவ்வளவு, செய்ய வேண்டிய ஊழியம் இவ்வளவு என்பது பாரம்பரிய வழக்கத்தின்படி விதிக்கப்பட்டிருப்பது. அவ்வாறு விதிக்கப்பட்டதற்கு மேலாக அறவிட அரசாங்கம் துணியாது. ஆனால் போர்த்துக்கேயர் பாரம்பரிய வழக்க முறைகளைக் கைவிட்டு ஊரவர்களிடம் இருந்து எவ்வளவு அறவிட முடியுமோ அவ்வளவையும் ஈவு இரக்கமின்றி அறவிட்டனர். அரசிறையை அறவிடுவதில் போர்த்துக்கேய அதிகாரிகள் சர்வதிகாரிகள் போலக் கருமம் ஆற்றினர். அவர்கள் தம் மனம் போன போக்கின்படி இவ்விடயத்திற் கருமம் ஆற்றுவதே சர்வசாதாரணமாக இருந்தது.

சுருங்கக்கூறுங்கால் அரசிறையை அறவிடும் விடயத்தில் அவர்கள் கேவலம் கொள்ளைக் கூட்டத்தினர் போல தயவுதாட்சண்யமின்றி அகப்பட்டதைச் சுருட்டுவதில் மாத்திரமே கண்ணும் கருத்துமாயிருந்தனர். சர்வம் கொள்ளை மயமாகவே அக்காலத்தில் அவர்களின் உத்தியோகக் கருமம் விளங்கியது என்று கூறினால் அது மிகையாகாது. திருட்டின் பொருட்டே அவர்கள் இலங்கைக்கு வந்த விதமாக அவர்கள் நடந்து கொண்டனர்.

பொருளாதார விடயமாக இவ்வாறு நாசத்தனமான பரிபாலனத்தை நடத்தியதோடு போர்த்துக்கேயர் நின்று விடவில்லை. அவர்கள் தயவு தாட்சண்யமற்றவராய், பழிபாவத்துக் அஞ்சாதவராய், கேவலம் மிருகத்தனமான கொடுங்கோலாட்சி புரிந்தமையினால் பிரஜைகளது துவேஷத்தையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டனர். இந்துக்களையும் பௌத்தர்களையும் அவர்கள் வெறுப்புடன் நோக்கி அவர்களை அஞ்ஞானிகள் என்றும் கல்லையும் செம்பையும் இரும்பையும் மரத்தையும் வணங்குபவர்கள் என்றும் கேலி செய்து மதவெறி கொண்டிருந்தனர்.

### போர்த்துக்கேயர் கல்வி நடவடிக்கை

போர்த்துக்கேயர் இப்படியான கொடுங்கோலராக இருந்தும் இன்றைய இலங்கையின் அம்சங்களாக் விளங்கும் சிலவற்றை விட்டுப்போயிருக்கிறர்கள்தான். "அஞ்ஞானிகளை" மனந் திருப்ப வந்த போர்த்துக்கேய குருமாரின் முயற்சியால் ரோமன் கத்தோலிக்க சமயம் நன்கு விருத்தியானது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்றுமதி...

பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது.

இது 2022ஆம் ஆண்டை காட்டிலும் கடந்த வருடத்தில் 0.39 சதவீதமான வீழ்ச்சியை பதிவு செய்துள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## போதை...

வளைப்பின்போது போதை மாத்திரைகளுடன் 8 இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சௌத்பார் பகுதியில் போதை மாத்திரைகளை விற்க முற்பட்ட இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த இளைஞனிடம்மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் சௌத்பார் புகையிரத நிலையப்பகுதி அருகில் கைவிடப்பட்ட அட்டை பண்ணை கொட்டில் ஒன்றில் சூட்சுமமான முறையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 31 ஆயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டது. (ம-7,285)



















## கடல் அலையால்..

யிருந்தார்.

இந்தச் சம்பத்தினை தொடர்ந்து தேடுதல் நடத்தியும் சடலம் கண்டு பிடிக்க முடியாத நிலையில் நேற்று மாலை குறித்த குடும்பஸ்தரின் சடலம் சாலை கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கியுள்ளது.

குறித்த சம்பவத்தில் 33 வயதுடைய 10ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பினைச் சேர்ந்த இராசதுரை கஸ்தூரன் என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் பிரேத பரிசோதனையினை மேற்கொண்ட பின்னர் உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்க உத்தரவிட்டிருந்தார். (ம-7,299)

## ஐஸ் போதை...

குறித்த பெண்ணிடம் இருந்து 920 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட பெண் வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவராவார்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த பெண்ணை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,250)

## விபரீத...

தொங்கிய நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் அங்கு சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளான். (ம-7,60)

## இந்தியாவின்...

யாழ்ப்பாணப் பண்பாட்டு மத்திய நிலையத்தில் பெப்ரவரி முதலாம் திகதி மாலை 6 மணியளவில் குறித்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்தியாவின் 75ஆவது குடியரசு தின கொண்டாட்டங்களின் தொடர்ச்சியாக யாழ்.இந்திய துணைத் தூதரகமும் இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயமும் இணைந்து குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

இந்நடன நிகழ்வுகளின் வரிசையில் ஒடிசி, கதகளி, சத்ரியா மற்றும் மணிப்புரி முதலானவை இடம்பெறவுள்ளது.(ம-7,33)

## அரிசியில்...

நெல், சோளம், உருளைக்கிழங்கு மற்றும் மிளகாய் பயிர்களுக்கு முன்னுரிமை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர இவ்வாறு தெரிவித்தார். (ம-7)

## பெப்ரவரி 4...

கழக மாணவர் ஒன்றியம் ஆகியன அறிவித்துள்ளன.

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்கான முன்னேற்றகரமான வேலைத்திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

"தமிழ் மக்களுக்கான உரிமைகள் மீறப்படுகின்றன. இருப்பு கேள்விக் குறியாகியுள்ளது. அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. ஆட்சிகளும், ஆட்சியாளர்களும் மாறுகின்றார்கள். எனினும் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பில் இன்றுவரை முன்னேற்றகரமான வேலைத்திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

அது வெறும் பேசுபொருளாக மாத்திரமே இருக்கின்றது. ஆகவே பெப்ரவரி 4ஆம் திகதியை வடக்கு, கிழக்கு தழுவிய கரிநாளாக பிரகடனப்படுத்துகின்றோம்" என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மேலும் மட்டக்களப்பு ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய அம்பாறை மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி தம்பிராசா செல்வராணி, காணாமல் போனோர் அலுவலகம் (OMP) மற்றும் அரசாங்கத்தின் புதிய உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் ஆணைக்குழு (TURC) என்பன தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காகவேனத்தெரிவித்துள்ளார்.

"14 வருடங்களாக நாங்கள் எமது போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். எத்தனை ஜனாதிபதி மாறி மாறி வந்தாலும். எமக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை. எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை யாரும் கூறவில்லை.

220ற்கும் மேற்பட்ட தாய்மாரை நாம் இழந்துள்ளோம். இவ்வாறான ஒரு சூழலிலேயே நாம் சர்வதேச நீதியை கோரி நிற்கின்றோம். ஓஎம்பி, டிஆர்சி என அனைத்தும் பொய்களே. எம்மை ஏமாற்றுவதற்காகவே இவைகள். பிள்ளைகளுக்கு, பாடசாலை மாணவர்களுக்கு என எவருக்கும் சுதந்திரம் இல்லை. எமது உரிமைக்காக போராடுவதற்கு எமக்கு சுதந்திரம் இல்லை. ஆகவேதான் நாங்கள் பெப்ரவரி 4ஐ கரிநாளாக பிரகடனப்படுத்துகின்றோம்

மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் செயலாளர் சஹறாஜன் சுகந்தி, திருகோணமலை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி கே.செபாஸ்டியன் தேவி ஆகியோர் குறித்த ஊடக சந்திப்பில் பங்கேற்றனர். (ம-7)

## இலங்கையில்...

உருவாவதை யாராலும் தடுக்க முடியாது.

நாட்டினை வங்குரோத்து செய்தோரை வீட்டுக்கு அனுப்ப மக்கள் தயாராக உள்ளனர்.

தரத்துடன் கூடிய பாரியளவிலான பல கோணங்களுடன் ஒரு அரசியல் கூட்டணி பாராளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்காலத்தில் ஒன்று சேர்ந்து சிறந்த ஜனாதிபதி வேட்பாளரை களமிறக்க உள்ளோம்.

அதேபோன்று சிறந்த தேர்ச்சியான வேட்பாளர் குழுவினை பொதுத் தேர்தலிலும் களமிறக்குவோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18802)

076 825 7716 (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு சம்பியன் வீதியில் 1 பரப்பு 13 குழிக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: (18829)

076 702 3565

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8240)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378
076 097 3127

# NEW SCIENCE HALL

## KANNATHIDDY ROAD, JAFFNA.

## 2024 A/L Day Class

### கணித, விஞ்ஞானப் பிரிவுகள்

[2023 பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது]

### நேரடி வகுப்புக்கள்
Monday to Friday

| | | |
|---|---|---|
| COM.MATHS | P.செந்தில் நாதன் | 7.00 am |
| | S.சிவகரன் | 5.00 - 7.00 pm |
| BIOLOGY | V.S. குணசீலன் | 8.00 - 9.30 am |
| CHEMISTRY | V.K. நந்தா<br>P.லோகாசனன் | 9.30 - 11.30am |
| PHYSICS | G.பிரபா<br>R.ராகுலன் | 11.30 - 1.30 noon |

### நிகழ்நிலை வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| COM.MATHS | P.செந்தில் நாதன் | Mon to Fri 7.00 am |
| BIOLOGY | K.இராகவன் | Mon to Fri 8.00-9.00 pm |
| PHYSICS | G.பிரபா | Mon to Fri 7.00-8.30 pm |
| | R.ராகுலன் | Mon to Fri 12.00-1.30 pm |
| CHEMISTRY | S.T.உமாசங்கர் | Sat, Sun & Mon 9.00-10.15 pm |
| | V.K.நந்தா | Mon to Fri 5.30-7.00 am |

(C-8237)

சகல மாவட்டங்களில் இருந்தும் இணைந்து கொள்ளலாம்

ஆரம்பம் : 05.02.2024

076 566 3006, 076 569 3006, 077 791 7611

https:facebook.com new science hall

## மாப்பிள்ளை தேவை

- உடுப்பிட்டி, இந்து, கௌரவ குலம், 1981, மிருகசீரிடம், B.Sc. Singapore Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- மீசாலை, இந்து, கௌரவகுலம், 1993, சதயம், 5'10" உயரம், MBBS Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- புங்குடுதீவு, இந்து, கௌரவகுலம் 1989, புனர்பூசம், Masters in Phycology, Norway Citizen Fair, Slim, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- நயினாதீவு - காரைநகர், இந்து கௌரவகுலம் 1996, பூராடம் M.D Doctor, USA பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- வட்டுக்கோட்டை, இந்து கௌரவ குலம், 1990, ரேவதி, Masters Degree, Uk அழகான பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- திருநெல்வேலி இந்து, கௌரவ குலம் 1982, மருகசீரிடம் M.Sc, Associate Director, Divorce, Uk Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- பருத்தித்துறை – சண்டிலிப்பாய், இந்து, கௌரவ குலம் 1991, பூசம், B.Sc (UK) CiMA (UK) Accountant, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- காரைநகர் இந்து, கௌரவ குலம், 1995, ஆயிலியம் Masters of Pharmacy (Uk Univercity) Denmark இல் பிறந்த UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- அச்சுவேலி, இந்து, கௌரவ குலம், 1992, ரேவதி, Graduate, Accountant, Uk பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

(18814)

S.Sharma J.P
Astrologer
Tel : 0112520619
Whatsapp : 077 803 8193

## மணப்பெண் தேவை

- கோப்பாய், இந்து, கௌரவ குலம், 1984, சதயம், MBBS Doctor, Ireland Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- சாவகச்சேரி, இந்து, கௌரவ குலம், 1984, ரேவதி, MBBS Doctor USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- தெல்லிப்பளை, இந்து, கௌரவ குலம், 1988, உத்தரம், B,Sc Civil Engineering, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இணுவில் – உரும்பிராய், இந்து, கௌரவ குலம், 1983, கார்த்திகை, Acca, Own Business, Uk மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- சங்கானை, இந்து, கௌரவ குலம், 1985, சித்திரை, UK Citizen Electronic and Electrical Engineering மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- யாழ். இந்து, கௌரவ குலம், 1986, மகம், Uk Citizen, M.Sc மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பொலிகண்டி - கரவெட்டி, இந்து, கௌரவ குலம், 1986, பூரம், B.Sc, Director of Marketing, Divorce, Uk Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை, இந்து, கௌரவ குலம், 1990, மகம், Graduate, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(18814)

S.Sharma J.P
Astrologer
Tel : 0112523127
Whatsapp : 077 803 8193

# TECHNA

Technical Institute

Smart thinking leads to innovate

A/L 2023 பிரிவு க.பொ.த உயர்தர தொழினுட்பப்பிரிவு

## இலவச செயன்முறை வகுப்புக்கள்

### உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

M.விஷ்ணு P.நிரோஜனன்

இறுதிச் செயன்முறைப் பரீட்சை வரையான காலப்பகுதி முழுவதும் அனைத்து செயன்முறைகளும் தொடர்ச்சியாக இலவசமாக நடைபெறும்.

ஆரம்பம் ; 01.02.2024, வியாழன் மாலை 3.00 மணிக்கு (18831)

- B1, B2, SPOT செயன்முறைகள் பூரணமாக பயிற்றுவிக்கப்பட்டதன் பின்னர் செயன்முறை பரீட்சைகளும் நடைபெறும்.
- குழு அடிப்படையில் நடைபெறுவதால் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் நேர வசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும்.
- வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளுக்கான தொடர்புகள் ஏற்படுத்தி தரப்படும்.

2 வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம். 077 170 3549 Technatechnicalinstitute

இப்பொழுது விற்பனையில்

## யாழ் எக்ஸ்பிரஸ்

YARL EXPRESS

### மூன்றாம் தவணை பயிற்சி வினாத்தாள்கள்

தமிழ், கணிதம், சுற்றாடல், சைவசமயம், இஸ்லாம், கத்தோலிக்கம், ஆங்கிலம், சிங்களம்

தரம் 1234



தெளிவான அச்சமைப்பு
அனுபவமிக்க ஆசான்களின் ஆக்கம்.

ரூ.240

Published By:
Unilanka's Publication & Book Depot
No. 326, Sea street. Colombo - 11. Tel : 011 401 4438
Hotline / Whatsapp / Viber : 077 625 8778
unilankas@gmail.com facebook : Unilankas Books & Calendars

(C-3233)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org